REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

விலை 4.00

# முஸ்லிம் செய்தி

THE CEYLON MUSLIM NEWS

الاخبار المسلمون

VOLUME: 1 No 7 SHABAN 1410 MARCH 25 1990 மார்ச் 25 1990 மலர் 1 இதழ் 7 ஷபோன்

# தமிழரும் முஸ்லிங்களும் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களும், தமிழர்களும் எக்காலமும் ஐக்கியத்துடனும், புரிந்துணர்வுடனும் வாழவேண்டியது இரு இன மக்களின் நல்வாழ்வுக்கும், பிரதேச அபிவிருத்திக்கும் அத்தியாவசியமாகும்.

முஸ்லிம்கள் நலன் கருதி எமது தனித்துவத்தையும் இன உரிமைகளையும் பாதுகாப்பதற்கென வடக்கு கிழக்குப் பிராந்தியத்தில் செயற்படுத்தக்கூடியதான. ஏற்பாடுகள் குறித்து காயிதே மில்லத், தேசமானி, டாக்டர் அல்ஹாஜ் பதியுத்தின் மஹ்மூத் அவர்கள் தலைமையில் அண்மைக் காலத்தில் தமிழ் தலைவர்களோடு, பல்வேறு பேச்சு வார்த்தைகள் நடாத்திப் பயனுள்ள உடன்பாட்டுக்கு நாம் வந்துள்ளோம்.



இஸ்ரேலியரை வெளியேற்ற நடவடிக்கை எடுத்தமைக்கு முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி மாண்புமிகு ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

# தமிழீழ விடுதலைப் புலிகள் - முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி கூட்டறிக்கை

"இனத்தின் தனித்துவம் காப்பாற்றப்பட நிரந்தர வாழ்விடம் எவ்வளவு அவசியம் என்பதை நன்கறிந்தவர்கள் முஸ்லிம்கள். பாரம்பரியமாக இருந்துவந்த நிலத்தை சியோனிஸ்டுகளான யூதர்களிடம் இழந்துவிட்டு இன்று இன்னல்களுக்கு மத்தியில் பல்வேறு நாடுகளில் அகதிகள் முகாம்களிலிருந்து தமது போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கும் பலஸ்தீன மக்களது நிலைமைகளைப் போலன்றி தம் நிலத்தைக் காப்பாற்ற தனித்துவமான தமது கலை கலாச்சாரம் பண்பாடு மதம் என்பவற்றைக் காப்பாற்ற அவர்கள் எம்முடன் சேர்ந்து போராட முன்வந்திருக்கிறார்கள். அதன் ஒருபடிதான் முஸ்லிம் பிரதி நிதிகள் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடாத்தி வெளியிட்டிருக்கும் கூட்டறிக்கை"—

அரசியல் பிரிவு தமிழீழ விடுதலைப்புலிகள்

டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர்களது தலைமையில் இலங்கையிலிருந்து வருகை தந்த முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணிப் பிரமுகர்களிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிற்குமிடையே சென்னையில் 1988 ஏப்ரல் 15ம், 16ம், 19ம் திகதிகளில் நடைபெற்ற கலந்துரையாடல்களின் போது. பின் வரும் விடையங்கள் ஆராயப்பட்டதில் இரு தரப்பாருக்குமிடையே கொள்கைகள் ஒத்ததாக இருந்ததென்பதை அறியக்கூடியதாக இருந்தது.

1 இலங்கை வாழ் முஸ்லீம்கள் தமிழ்மொழியை பேசுபவர்களாக இருப்பினும் அவர்கள் வேறுபட்ட தனித்துவத்தைக் கொண்ட, தமிழ்த் தேசியத்தினுள் உள்ளடங்கிய ஒரு இனக்குழு என்பதனையும், வடக்கு கிழக்கு மாகாணம் ஏனைய தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகமாக உள்ளது போலவே, முஸ்லீம்களது பாரம்பரிய தாயகமாக உள்ளது என்பதனையும் ஏற்றுக் கொள்கிறோம்.

2 வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த தாயகத்தில் வாழும் தமிழர்களும் முஸ்லீம்களும் ஐக்கியத்துடனும் சமாதானத்துடனும் வாழ வேண்டும் என்பதனையும், முஸ்லீம்கள் இப்பிரதேசங்களில் சிறுபான்மையினராக வாழ்கின்ற காரணத்

2 ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் அல்-ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர்களது தலைமையில் முஸ்லிம் பிரமுகர்களும், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி முக்கியஸ்தர்களும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க பிரமுகர்களுடன் சென்னையில் 1988 ஏப்ரல் 15ம் 16ம் 19ம் திகதிகளில் நடத்திய பேச்சுவார்த்தையின்போது

முஸ்லிம் செய்தி
THE CEYLON MUSLIM NEWS
الأخبار المسلمون

(1-ம் பக்க தொடர்ச்சி)

## தமிழீழ விடு....

திஞல் அவர்கள் அச்சம், பயம், சந்தேகமற்று வாழ வேண்டியது முக்கியமாகையால் அவர்களது பாதுகாப்பையும், சமமான உரிமைகளையும், சுதந்திரத்தையும் உத்தரவாதப்படுத்த வேண்டியது அவசியம் என்பது உணரப்படுவது மாத்திரமின்றி, கொள்கையும் என்பதனுல். முஸ்லீம்கள் அச்சம், சந்தேகம், பயமற்று வாழ்வதற்கான சூழ்நிலைகள் உடனடியாக ஏற்படுத்தப்படுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவர் என்பதையும், முஸ்லீம்கள் பாதுகாப்புடன் வாழ்வதற்கு எதிர்பார்க்கப்படும் முழு உத்தரவாதமும் சட்டரீதியாக வழங்கப்பட வேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்கிறோம்.

3 தாயகத்தில் முஸ்லீம் மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் எனவும், தாயகத்தில் உரிமைகளை வென்றெடுப்பதற்காக முஸ்லீம் மக்கள் ஏனைய தமிழ் பேசும் மக்களுடன் பெருமளவில் இணைவதன் மூலமாகத்தான் தமது மண்ணையும், கலாசாரத்தையும் காப்பாற்ற முடியுமென்பதும், முஸ்லீம் மக்களின் நலனுக்காக தமிழீழ விடுதலை புலிகள் தொடர்ச்சியாகப் பாடுபட்டு வருவார்கள் என்பதும் உறுதியாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 முஸ்லீம்களினதும், ஏனைய தமிழ் பேசும் மக்களினதும் அபிலாசைகள் பாதிக்கப்படாத வகையில் இந்திய இலங்கை ஒப்பந்தம் முழுமையாக அமுலாக்கப்படுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணியும் ஒத்துழைப்பு வழங்குவர்.

5 மாகாண சபைக்கான 13 வது அரசியல் சட்டத் திருத்தம் முஸ்லீம் மக்களினதும், ஏனைய தமிழ் பேசும் மக்களினதும், அடிப்படை அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யவில்லை.

இச்சட்டத்திருத்தம் இந்திய இலங்கை உடன்பாட்டிற்கு முரணான வகையில் சட்டமாக்கப்பட்டுள்ளது.

மேலும் 13 வது சட்டத் திருத்தத்தினுள் உள்ளடங்கிய சில சரத்துக்களும், இந்திய இலங்கை உடன்பாட்டிற்கு முரணானதாகவுள்ளது.

இந்நிலையில் 13 வது அரசியல் திருத்த சட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

6 முஸ்லீம் மக்களது உரிமைகளைப் பாதுகாக்கவும், ஆட்சியதிகாரங்களை நியாயமான முறையில் பகிர்ந்து கொள்ளவும் கூடிய ஏற்பாடுகளைச் செய்யும்போது, அத்தகைய நடவடிக்கைகள் தமிழ் பேசும் மக்களின் தாயகத்தின் ஒருமைப்பாட்டிற்கு பாரதூரமான குந்தகமெதுவும் ஏற்படுத்தக்கூடாது.

7 மேற்கூறிய தளடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாண சபையில் ஏனைய தமிழ் பேசும் மக்களுக்குள்ள இவ் உரிமைகளையும், சலுகைகளையும் வாய்ப்பினையும், சுதந்திரத்தினையும் அனுபவிப்பதற்கு, வடக்கு கிழக்கு மாகாணத்தை தமது தாயகமாகக்கொண்ட முஸ்லீம்கள் உரித்துடையவர்கள்.

8 கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம்கள் 33% தொகையினர். வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த மாகாணத்தில் முஸ்லீம்கள் 18% தொகையினர் முஸ்லீம்கள் அதி கூடிய பாதுகாப்பை பெற்று, ஆட்சியதிகாரங்களை பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பினையும் பெறக்கூடிய வகையில், ஒன்றிணைந்த தாயகத்தினுள் 30% குறைவில்லாத வகையில் மாகாண சபையில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கும், அமைச்சரவையில் இடம் பெறுவதற்கும், உரித்துடையவர்கள் என்பதை ஏற்றுக்கொள்வதுடன், இவ்விகிதப்படியான உருத்துகளைப் பெறுவதற்கு தேவையான அரசியல் சட்ட ஏற்பாடுகளைச் செய்வதற்கு இரு தரப்பினரும் முழு முயற்சிகளையும் மேற்கொள்வர்.

9 வருங்கால அரச காணிப் பங்கீடு முஸ்லீம்களுக்கு கிழக்கு மாகாணத்தில் 35% குறைவில்லா வகையிலும், மன்னார் மாவட்டத்தில் 30% குறைவில்லாத வகையிலும், வட மாகாணத்தின் ஏனைய பகுதிகளில் 5% குறைவில்லாத வகையிலும் இருக்க வேண்டும்.

10 வடக்கு கிழக்கு தாயகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் வாழும் முஸ்லீம்களின் விகிதாசாரத்தின்படி, பொதுத்துறை வேலை வாய்ப்பிற்கான உரிமையை முஸ்லீம்கள் கொண்டிருப்பர்.

11 கல்வித்துறையில் எல்லா இடங்களிலும் சம வாய்ப்புகள் பேணப்படும் வரை பல்கலைக்கழக அனுமதியின்போது கல்வித்துறையில் பின் தங்கியுள்ள பிரதேசங்களில் விசேட கவனிப்பு செலுத்தப்படும்.

பல்கலைக்கழகமட்டம் வரையிலான பிரத்தியேக கல்வி வசதிகள் முஸ்லீம்களுக்காக ஏற்படுத்தப்படும்,

முஸ்லீம் மக்களுக்காக இஸ்லாமிய பல்கலைக் கழகம் நிறுவப்படும்.

12 முஸ்லீம் மக்களது தனித்துவத்தின் உரிமைகள், அக்கறைகள் என்பவற்றை பாதிக்கக்கூடிய எதுவித சட்டவாக்கங்களும், அவற்றிற்கு முஸ்லீம் பிரதிநிதிகள் 3/4 பெரும்பான்மையினர் சார்பாக வாக்களித்தாலன்றி, வடக்கு கிழக்கு மாகாண சபையினுல் நிறைவேற்றப்படலாகாது.

13 வடக்குக்கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக ஒரு முஸ்லீம் முறையாக நியமிக்கப்பட்டிருந்தாலன்றி அம்மாகாண சபையின் பிரதி முதலமைச்சராக ஒரு முஸ்லீம் நியமிக்கப்படுவதைஉறுதி செய்யும் வகையில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும்.

14 வடக்கு கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் அவர்கள் அரசியல், நிர்வாக, அபிவிருத்தி விடயங்களில் உரிய பங்கினைப் பெறுவதற்கு தேவையான அரசியல், நிர்வாக, அபிவிருத்தி அலகுகள் பல்வேறு மட்டங்களில் உருவாக்கப்படுதல் வேண்டும், இது பற்றி விடுதலைப் புலிகள் தமது கருத்துக்களை தெரிவித்துள்ளனர். இவற்றுள் உள்ளடக்கப்பட வேண்டிய பாரம்பரிய எல்லைகள், மூலவளங்கள் என்பன பற்றி மேலும் இரு பகுதியினரும் ஆய்வு நடத்தி இறுதி முடிவு மேற்கொள்ளப்படும்.

15 தமிழ் பேசும் மக்களின் தாயகத்தை அபகரிக்கும் நோக்கத்துடனும், அங்குள்ள இனப்பரம்பலைமாற்றி அமைக்கும் வகையிலும், அவர்களது பொருளாதார, அரசியல், நிர்வாக பலத்தினை ஒழியடிக்கும் கொள்கையுடனும் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட அரச குடியேற்றங்களால் ஏற்பட்ட பாதிப்புகளை நீக்கும் வகையில் ஒரு குடியகல்வுக் கொள்கை உருவாக்கப்படுதல் வேண்டும்.

16 தமிழ் பேசும் மாகாண சபைக்காக நடக்க இருக்கும் எதிர்வரும் தேர்தல் நியாயமான அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலைக்கொண்டிருத்தல் வேண்டும். இவ்வாக்காளர்பட்டியல் எந்த ஆண்டினை அடிப்படையாக கொண்டிருத்தல் வேண்டும் என்பது பற்றி விரிவாக ஆராயப்பட்டது,

17 வடக்கு கிழக்கில் நடைபெறும் போர் நடவடிக்கைகளினுல் உண்மையில் அப்பாவி மக்களே சொல்லொணு பெருந் தொல்லைக்குள்ளாகின்றனர். மக்கள் சாதாரண வாழ்க்கைக்கு திரும்ப போர் நிறுத்தம் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும்.

18 யுத்த நிறுத்தத்திற்குப் பின்னர் மக்கள் இயல்பான வாழ்க்கைக்கு திரும்பி முறையான மாகாண சபைத் தேர்தல் நடக்கும் வரையும் இடைக்கால நிர்வாக அரசு ஒன்று அவசியமாகும். இந்த இடைக்கால அரசில் ஏற்கனவே இது தொடர்பில் செய்யப்பட்ட முடிவின் பிரகாரம் அங்கத்துவம் அமைதல் வேண்டும்.

ஒப்பம்

சதாசிவம் கிருஷ்ணகுமார்
மத்திய குழு உறுப்பினர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்

21—4—1988

ஒப்பம்

எம். ஐ எச். மொஹிதீன்
செயலாளர் நாயகம்
முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி

21—4—1988

# தமிழர் விடுதலைக் கூட்டணி - முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி கூட்டறிக்கை

இந்திய-ஸ்ரீலங்கா உடன்பாட்டில் வட மாகாணமும் கிழக்கு மாகாணமும் தமிழ்பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடங்கள் என அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணி முஸ்லிம்களின் பிரத்தியேகமான தனித்துவத்தை (Identity) அங்கீகரிக்கின்றது.

முஸ்லிம்கள் நாடு முழுவதிலும் மட்டுமன்றி, வடக்கு கிழக்கு மாகாணத்திலும் சிறுபான்மையினராகவே உள்ளனர். இதை உணர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி பின்வருவனவற்றை விதந்துரைக்கின்றது.

1. காத்தான்குடி, ஏருவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, கிண்ணியா, தம்பலகாமம் (முள்ளிப்பொத்தானை) எருக்கலம்பிட்டி, முசலி ஆகிய ஒவ்வோர் இடங்களுக்கும் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட உப அரசாங்க அதிபர் பிரதேச சபைகளை-பிரிவுகளை ஏற்படுத்துதல், ஒவ்வொரு பிரிவிலும் எவ்வெப் பிரதேசங்கள் உட்படுத்தப்பட வேண்டும் என்பது பாரம்பரிய வாழ்விடங்கள், நிலம் மூல வளங்கள் என்பவற்றின் அடிப்படையில் மேலும் கலந்துரையாடல்கள் நடாத்தி முடிவு செய்யப்படும்.

2. கல்முனையில் ஒரு மாநகர சபை ஏற்படுத்துவதுடன் சம்மாந்துறை, காத்தான்குடி, கிண்ணியா, ஆகிய இடங்களில் நகர சபைகளை நிறுவுதல். இச்சபைகளின் ஆள்புல எல்லைகள் எவை என்பது கலந்துரையாடி முடிவு செய்யப்படும்.

3. தமிழர் விடுதலை கூட்டணி முஸ்லிம்களினுடைய பிரதிநிதித்துவத்தை உத்தரவாதப்படுத்துவதற்காக, மாகாணசபைக்கான அங்கத்தவர்களின் தெரிவு ஆள்புல ரீதியான தேர்தல் (Territori-al Constituencies) அமைத்தல் வேண்டுமென அதன் ஆலோசனைகளில் விதந்துரைத்திருந்தது. மேலும் மாகாணசபைக்கான அங்கத்தர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு 1000 சதுர கிலோ மீட்டருக்கு ஒரு அங்கத்தவரும் ஒவ்வொரு 30,000 மக்கள் தொகைக்கு ஒரு அங்கத்தவரும் என்ற அடிப்படையிலும் நிர்ணயிக்கப்படவேண்டும் எனவும் கேட்டிருந்தோம். ஆனல் அரசாங்கத்தின் பிரேரணை அங்கத்துவத் தெரிவு விகிதாசரப் பிரதிநிதித்துவ முறையினடிப்படையிலேயே அமைதல்வேண்டும் எனவும் மேலும் அதுநிலப்பரப்பினடிப்படையிலும், ஒவ்வொரு 40,000 மக்கள் தொகைக்கு ஒரு அங்கத்தவர் என்ற அடிப்படையிலும் அமைதல்வேண்டும் எனவும் கூறியது. இந்த அடிப்படையில் வடக்கு-கிழக்கு மாகாணசபை 71 அங் [illegible] அமையும். அதாவது வட மாகாணத்துக்கு 36 அங்கத்தவர்களும் கிழக்கு மாகாணத்துக்கு 35 அங்கத்தவர்களும் இருப்பர்.

முஸ்லிம்கள் கிழக்கு மாகாணத்தில் 32. 27%மும வடக்கு மாகாணத்தில் 4 74%மாகவும் உள்ளனர். த. வி. கூட்டணி, முஸ்லிம் தூதுக்குழுவினருடன் விரிவாக விவாதித்த பினனர் கிழக்கு மாகாணத்தில் 12க்குக் குறைவில்லாத முஸ்லிம் அங்கத்தவர்களும், வட மாகாணத்தில் 5க்குக் குறைவில்லாத முஸ்லிம் அங்கத்தவர்களும் மாகாண சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதை உறுதி செய்யும் வகையிலான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதனை ஏற்றுக் கொள்கின்றது.

4. வடக்கு-கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சராக ஒருமுஸ்லிம் முறையாக நியமிக்கப் பட்டிருந்தாலன்றி, குறித்த மாகாண சபையின் பிரதி முதலமைச்சராக ஒரு முஸ்லிம் நியமிக்கப்படுவதை உறுதிசெய்யும்வகையில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும். முஸ்லிம் விவகாரங்களுக்கான ஒரு அமைச்சர்உட்பட அமைச்சர்கள் சபையில் 25வீதத்துக்குக் குறைவில்லாத அமைச்சர்கள் முஸ்லிம்களாக இருப்பதற்கு வகைசெய்யும் விதத்தில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

5. வருங்கால அரச காணிப் பங்கீடுகளில் முஸ்லிம்களுக்கு உரித்துடைய காணிப் பங்கு விகிதம் கிழக்கு மாகாணத்தில் 35 வீதத்துக்குக் குறைவில்லாமலும், மன்னார் மாவட்டத்தில் 30க்குக் குறைவில்லாமலும், வட மாகாணத்தின் ஏனைய பகுதிகளில் 10 வீதத்துக்குக் குறைவில்லாமலும் இருத்தல் வேண்டும்.

(7 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் செய்தி
THE CEYLON MUSLIM NEWS

# சட்டவிரோததேர்தலுக்குச்சற்றுமுன்

1988 நொவம்பர் 19ஆம் திகதி சனிக்கிழமை, வடகிழக்கு மாகாண சபைக்கு கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பதாக அந்த வாரத்தில் கிழக்கு மாகாணத்தில் நிலைமை எப்படி இருந்தது என்பதை, 1988 நொவம்பர் 14ஆம் திகதி திங்கட்கிழமை மகாகனம் பொருந்திய ஜனாதிபதியவர்களுக்கு திரு. கே. டபிள்யு. தேவநாயகம்(கல்குடா எம்.பி உள்நாட்டு அமைச்சர்,) திரு. சி இராசதுரை. (மட்டக்களப்பு முதலாவது எம்.பி. பிரதேச அபிவிருத்தி ஹிந்து மத கலாச்சார அமைச்சர்,) திரு பி.தயாரத்ன,(அம்பாறை எம்.பி. மின்சக்தி அமைச்சர்,) திருமதி. ஆர். பத்மநாதன் (பொத்துவில் இரண்டாவது எம்.பி.மட்டக்களப்பு மாவட்ட மந்திரி) ஜனாப் அப்துல் மஜீத். (சம்மாந்துறை எம. பி.பிரதித் தபால் அமைச்சர்) ஜனாப் எம். ஐ.உதுமா லெவ்வை,(பொத்துவில் முதலாவது எம் பி.)ஜனாப் ஏ.ஆர்,எ.ச. மன்சூர்,(கல்முனை எம்.பி. முல்லைத்தீவு மாவட்ட மந்திரி) ஜனாப் றிஸ்வி சின்ன லெவ்வை. (மட்டக்களப்பு இரண்டாவது எம்.பி ) ஆகியோர் கைச்சாத்திட்டு அனுப்பிய கடிதத்தில் பின் வருமாறு கூறப்பட்டுள்ளது.

வாக்காளர்கள் தமது தெரிவை சுதந்திரமாகவும் விருப்பப்படியும் அவர்களது வாக்குச் சீட்டுகளில் குறிப்பிட்டுத் தெரிவிக்கமுடியாத சீர்கேடான நிலைக்குக் கிழக்கு மாகாணம் தீவிரமாக மோசமடைந்து போய்கொண்டிருக்கிறது. நிறைய ஆயுதங்களை வைத்துக்கொண்டு ஈ பி.ஆர். எல். எப். எல்லா இடங்களிலும் பலவந்தமாகக் காரியாலயங்களை நிறுவுகின்றனர். கல்முனைப் பகுதியில் மக்களை மிரட்டி அச்சுறுத்துகின்றனர்" அவர்களை எதிர்த்த ஐவர் சென்ற சனிக்கிழமைகாலையில் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளனர் மட்டக்களப்பு மாவட்ட மந்திரியின் கந்தோரையும் வீட்டையும் உடைத்து உட்சென்று, இந்தக் கட்டடத்தைப் பலவந்தமாகக் கைப்பற்றி அவர்களது தலைமைக் காரியாலயமாகப் பாவிக்கின்றனர். ஈ பி. ஆர். எல் எப் வுக்கு வாக்களிக்காவிட்டால் எதிர்த்து வாக்களித்தவர்கள் அனைவரும் 20-ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து விரட்டியடிக்கப்படுவர், என்று தாங்கள் அச்சுறுத்தப்படுவதாக எமது ஆதரவாளர்களிடமிருந்து தொலைபேசிகள் மூலம் ஏகப்பட்ட முறைப்பாடுகள் வந்து குவிகின்றன. சம்மாந்துறையில் மக்கள் கடத்தப்படுகின்றனர்தேர்தலில் பாவிப்பதற்கு வாகனங்கள், உணவு இயந்திரங்கள், மோட்டார் சைக்கிள்கள் பலவந்தமாக அபகரிக்கப்படுவதாக மக்கள் பெரிதும் கலவரமும் பீதியும் அடைந்துள்ளனர். ஈ. பி. ஆர், எல் எப், முஸ்லிம் காங்கிரசுக்கு எதிராகப் பிரசாரம் செய்கின்றது. அதற்காக முஸ்லிம் பகுதிகளுக்கு வந்து அவர்களின் வாகனங்களைப் பலவந்தமாகக் கடத்திச் சென்று உபயோகின்றனர். மட்டக்களப்பு முன்னாள் எம். பி. பரித் மீரா லெவ்வையின் வீட்டுக்குள் பலவந்தமாகப் புகுந்து அவரது கைம் பெண்ணையும் பிள்ளைகளையும் துன்புறுத்தி வீட்டையும் சூறையாடிச் சென்று விட்டனர். இப்படியான அட்டூழியங்களால் இனக்கலவரங்கள் நிச்சயம் ஏற்படும். போராளிகளின் மூன்று நட்சத்திரக் கூட்டமும்; இந்திய அமைதிப் படையும் சென்று மாளிகைக் காட்டில் முஸ்லிம்களைத் தாக்கியதை இந்திய ராணுவக் கொமாண்டரே ஏற்றுக்கொண்டு மூன்று நட்சத்திரக் கூட்டம் இப்படி நடந்துகொள்வார்கள் என்று தான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை என்றுகூறியுள்ளார்·தேர்தலிற் பங்குபற்றுவதற்குத் தாங்கள் கருதிய போதும் என்று இவர்கள் பயங்கரவாதிகள் என்பதனாலேயே இப்படியெல்லாம் நடக்கிறது.

இப்படியான படுமோசமான பயங்கரச் சூழ்நிலையில் மக்கள் தங்கள் வாக்குகளை அச்சமின்றிக் கொடுக்கக்கூடிய ஜனநாயக ரீதியான, சுதந்திரமான ஒரு தேர்தல் நடத்துவது சாத்தியமில்லை. தேர்தல் ஆணையாளர் அவருக்கு வேண்டிய உத்தியோகத்தர்களை இந்தப்பிரதேசத்துக்கு வெளியிருந்துதான் இறக்குமதி செய்கிறார் என்ற காரணத்துக்காகத் தயவு செய்து இந்தத் தேர்தலை ஒத்திவைக்குமாறு மிகவும்பணிவாக வேண்டுகிறோம்.

பொலிஸ் மா அதிபர் ஐ ஜீ பி இத்தேர்தல் நடத்த முடியாது என்று அறிக்கை சமர்ப்பித்துள்ளார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வன் செயல் காரணமாக இத்தேர்தல் நடத்த முடியாது என்று அறிவித்துள்ளார். தேர்தல் ஆணையாளருக்கு கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு தேர்தல் மாவட்டத்திற்கும் பொறுப்பதிகாரியாகக் கடமைபுரியக் கூடிய தகுதி வாய்ந்த எவரும் இப்பகுதியிலிருந்து கடமைக்கு எடுக்கமுடியாத காரணத்தால் உத்தியோகத்தர் கொழும்பிலிருந்து இறக்குமதி செய்து இராணுவமுகாமுக்குள் தங்கி இருந்து வேலை முடிந்ததும் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்படுவர். இந்த நிலையில் நீதியான, சுதந்திரமான ஜனநாயக முறையில் ஒரு தேர்தல் நடத்த முடியாது என்பதைக் கூறி இத்தேர்தலை நிலைமை வழமைக்குத் திரும்பும் வரை ஒத்திவைக்கும்படி வேண்டிக்கொள்கிறோம்.

கல்குடாவில் ஐந்து ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்கள் கடத்தப்பட்டு பெருந்தொகைப் பணத்தைப் பணயமாக அபகரித்து தேர்தலில் பங்கு கொள்ளக் கூடாது என்ற எச்சரிக்கையோடு விடுவிக்கப்பட்டனர். இதற்கும் பின் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் எவருமே போட்டியிட முன்வரவில்லை இதனால் ஈ.பி. ஆர். எல். எப். போட்டியின்றித் தெரிவாகக் கூடிய சூழல் ஏற்பட்டது. கடைசியாகப் பெரும் முயற்சியின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் பட்டியல் செயலாளரிடம் ஞாயிறு அதிகாலை 3.30 மணிக்குத்தான் ஒப்படைக்கப்பட்டது. சி. தில்லையம்பலம் என்ற ஒரு வேட்பாளர் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த இக்கட்டான நிலையில்தான் எமது ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் இத்தேர்தலை எதிர்நோக்குகின்றனர். வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை அச்சமின்றிச் சுதந்திரமாகவும் நியாயமாகவும் கொடுக்கக்கூடிய தேர்தல் ஜனநாயக ரீதியில் நடைபெறட்டும் அதுவரை இத்தேர்தலை தயவு செய்து ஒத்திப் போடுமாறு தங்களை வேண்டிக் கொள்கிறோம். இங்கு நடக்கும் உண்மை நிலையை உங்களுக்கு நேரில் விபரமாகக் கூறுவதற்கு உங்களை நாங்கள் பார்க்கவிரும்புகிறோம்'' என்று கூறியுள்ளார்.

# முஸ்லிம் காங்கிரஸ் தெரிவு முறையற்றது

ஒன்றிணைந்த வடக்குகிழக்கு மாகாணசபைக்கு மட்டக்களப்பு. அம்பாறை. திருகோணமலை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் 1988 நொவம்பர் 19 சனிக்கிழமை நடந்த தேர்தல் 1988 ஆம் ஆண்டு 2ஆம் இலக்க தேர்தல் சட்டப்படி நடத்தப்பட்ட தேர்தல் அல்ல.

சில தேர்தல் வேட்பாளர் விண்ணப்ப பத்திரங்களில் உத்தேச பெயர்களே கொடுக்கப்பட்டிருக்கிறன. இதுவே தான் தேர்தல் முடிந்ததும் வெற்றிபெற்ற பெயர்களுக்குரிய நபர்களை ஆஜராக்க முடியாமல் இருந்ததற்குத் திருகோணமலையில் நடந்த சத்தியப் பிரமாணவைபவத்துக்குச் சமூகம் கொடுக்க முடியாமல் இருந்ததற்கு தடையுமாகும்.

22 வது பிரிவுப்படி வாக்கெடுப்பு நிலையங்கள் வாக்காளர்களுக்கு அறிவிக்கப்படவில்லை 25வது பிரிவில் கூறபட்டப்படி தபால்கந்தோர்கள் தேர்தல் அட்டைகளைத் தக்க நேரத்தில் வாக்காளர்களுக்கு விநியோகிக்கவில்லை, எதுவித அறிவித்தலும் இன்றி வாக்கெடுப்பு நிலையங்கள் மாற்றப்பட்டதால் வாக்காளர்களுக்குக் குளப்பம் ஏற்பட்டது. அனேகமானவர்கள் எங்கு போவதென்று தெரியாததால் வாக்குக் கொடுக்கப்போகவில்லை.

27வது பிரிவிற் கூறப்பட்டபடி தகுமான அளவு உத்தியோகத்தரும்; வசதிகளும் வாக்கெடுப்பு நிலையங்களில் இருக்கவில்லை. இதனால் வாக்காளர்இடாப்புசரிவரக்குறிப்பிடப்படவில்லை. சட்டத்தில் கூறியபடி அழிக்க முடியாத மை விரல்களில் பூசுதல் போன்ற கட்டாய கடமைகள் சரிவர நடைபெறவில்லை

33வது பிரிவிற்கு மாறாக ஆயுதம் தாங்கிய இந்திய இராணுவத்தினர் வாக்கெடுப்பு நிலையத்தில் நிலைகொண்டு தேர்தல் வேலைகளை[illegible]னர்.

33வது பிரிவில் வாக்குச் சீட்டுக்கள் வாக்காளர்களுக்கு தேர்தல் நிலையத் தலைவரால் அல்லாது அவரின் அங்கீகாரம் பெற்ற ஒருவரால் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது ஆனால் சட்டத்துக்கு மாறாக ஆயுதம் தாங்கிய இந்தியா இராணுவத்தினரே வாக்குச் சீட்டுக்களைப்பங்கிட்டனர்,

31வது பிரிவில் கூறப்பட்டிருப்பது போல் ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையங்களும் காலை 7. 00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் 4. 00 மணிக்கு மூடப்படவேண்டும் ஆனால் எத்தனையோ வாக்கெடுப்பு நிலையங்கள் இரவு 7.00 மணியளவிலேயே மூடப்பட்டன.

66(g) பிரிவுக்கு மாறாக ஆயுதம் தாங்கிய போராளிகளும் இந்திய இராணுவ[illegible] தேர்தல் [illegible]சிக்காரர்களும் பலவந்தமாக வாக்குச் சீட்டுக்களை வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வெளியில், கொண்டுவந்து வெளியில் நின்றவர்களையும் சேர்த்துக்கொண்டு தங்களால் இயன்ற அளவு வாக்குச் சீட்டுக்களை அடையாளம் போட்டு அள்ளிக் கொண்டுவந்து போட்டனர். இதனால் தான் வாக்குச் சீட்டுக்கள் எண்ணும் போது, வாக்குச் சீட்டுக்களுடன் அடிக்கட்டைகளும் சேர்ந்து இருந்தது. இது வாக்கெடுப்பு நிலைய உயர் அதிகாரிகள் தேர்தல் ஆணையாளர்களுக்குத் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர். வாக்குப் பெட்டிகளைத் திறந்து எண்ணியபோது பல திடுக்கிடும் உண்மைகள் வெளியாகின! பெட்டிகளுக்குள் இருந்த வாக்குச் சீட்டுக்கள் அந்த நிலையத்துக்கு பதிவான வாக்காளர்களைவிடவும் கூடுதலாக இருந்தன. வாக்குச் சீட்டுகளுடன் அடிக்கட்டைகளை ஒப்பிடமுடியாமல் வாக்குச் சீட்டுகள்கூடுதலாக இருந்தன

தேர்தல் வாக்குகள் எண்ணி முடிந்ததும், கல்முனையில் 98சதவிதமான வாக்குகள் போடப்பட்டிருந்தன. காத்தான்குடியில் 92 சதவிதவாக்குகள் போடப்பட்டிருந்தன மூதூரில் 86 சதவிகித வாக்குகள் போடப்பட்டிருந்தன இப்படி வழமைக்கு முற்றும் மாறாக வாக்குகள் போடப்பட்டிருப்பதை அவதானிக்கும் போது இது உண்மையில் தனித்தனி வாக்காளர்கள் விருப்ப வாக்குகளாக இருக்க முடியாது என்பதை மறுக்க முடியாதோ அதே போலவே இந்த வாக்குகள் இந்திய இராணுவத்தின் உதவி ஒத்தாசையோடு போடப்பட்ட கள்ள வாக்குகள் என்பதையும் எவரும்மறுக்கமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் செய்தி
THE CEYLON MUSLIM NEWS
الأخبار المسلمون

57 1/1 நொறிஸ் கனல் ரோட், கொழும்பு 10
25. மார்ச் 1990 25, MARCH 1990

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸே எல்லா அனர்த்தங்களுக்கும் முழுப் பொறுப்பு

"முஸ்லிங்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படாத, முஸ்லிங்களின் நலனில் அக்கறைகாட்டாத இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை நாம் ஏற்கமாட்டோம், என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அன்று மிக உறுதியாகக் கூறியது. இந்திய அமைதிகாக்கும் படையினரால், எமக்கு எந்தவிதபாதுகாப்பும் இல்லை. அவர்களே தமிழ் - முஸ்லிம் இனக்கலவரங்களைத் தூண்டிவிடுகின்றனர்' என்றும் பகிரங்கமாகக் கண்டனம் செய்தது வட கிழக்கு மாகாணசபைத்தேர்தல் பிரகடனமானதும் அதனை முழுமூச்சாக எதிர்த்து, முஸ்லிம்களின் பாதுகாப்பும், நலன்களும் உறுதிப்படுத்தப்படாதவரை இத்தேர்தலில் பங்கு கொள்ளவில்லை என்று அறிக்கைக்குமேல் அறிக்கை வெளியிட்டது. இந்தக் கோஷங்களைக் கொண்டே முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தில், தனது செல்வாக்கைக் கட்டியெழுப்பியது ஆனால் திடீரென இந்தியத் தூதுவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப்பீடமும் சந்தித்தபின்னர் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் காரணமாக, முஸ்லிம் காங்கிரஸ் அவசரஅவசரமாகத் தேர்தலில் பங்கு கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் வெற்றி கிழக்கு மாகாணத் தேர்தலிலேயே பெருமளவு தங்கியிருந்தது முஸ்லிம் காங்கிரஸ் இத்தேர்தலில் பங்கு பற்றியதன் பின்தான், இத்தேர்தலுக்கு மதிப்பு ஏற்பட்டது; ஒன்றிணைந்த மாகாணசபை உருவாகியது கிழக்குமாகாண முஸ்லிங்களின் 33 வீத வீரியம் 17 வீதம் ஆகக் குறைக்கப்பட்டது. முஸ்லிம் காங்கிரஸ் மட்டும் இந்தியாவிடம் ஏதும் வாங்காமல் மாகணாசபைத்தேர்தலில் பங்கு பற்றாமல் இருந்திருந்தால் தமிழர் சிங்களவர் எவருமே தேர்தலில் பங்குபற்றியிருக்கமாட்டார்கள். ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபையும் ஏற்பட்டிருக்காது முஸ்லிங்களின் விகிதாசாரமும் குறைந்திருக்காது.

மக்களின் ஆணையினைப் பெறுவதற்கும், முஸ்லிங்களை ஒற்றுமைப்படுத்துவதற்கும், பெரும்பான்மைத் தேசியக் கட்சிகளின் பிடியிலிருந்து முஸ்லிங்களை காப்பாற்றி காங்கிரஸ்தான் முஸ்லிங்களின் ஏகபிரதிநிதி என்பதை நிரூபிக்கவுமே, கிழக்குமாகாணசபைத்தேர்தலில் போட்டியிட்டோம். அல்லாமல் மாகாணசபையின் பதவிகளைப் பெறுவதற்காகவல்ல' என்று முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிங்களின் கவனத்தைதிசைதிருப்பியது. முஸ்லிங்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படாதவரை, மாகாணசபைக்குச் செல்லமாட்டோம் என்று சாதம செய்தனர்- கிழக்கு மாகாண முஸ்லிங்களும் அதை நம்பினர். நடந்தது என்ன? முஸ்லிங்களின் நம்பிக்கை நாசமாகியது.

முஸ்லிங்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டதா? முஸ்லிங்களின் நலனில் எச்சந்தர்ப்பத்திலாவது அக்கறை காட்டப்பட்டதா? இல்லவே இல்லை.

இன்னணியா தாக்கப்பட்டது இந்தியஅமைதிப்படை அதன் பின்னணியில் இருந்தது. ஊரடங்கு நேரத்தில் மன்னார் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய இடங்களில் முஸ்லிங்கள் தாக்கப்பட்டு, பல உயிர்கள் பலியாக்கப்பட்டன கல்முனையில் கடைகள் எரிக்கப்பட்டன முஸ்லிமகள் சுடத்தப்பட்டனர். இதே இந்திய அமைதிப்படை அதன் பின்னணியில் இருந்தது நிந்தவூர் வாசிகள் கடத்தப்பட்டபோது. சம்மாந்துறை எரிக்கப்பட்டபோது காரைதீவுச் சந்தியில் முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டபோது இதே அமைதிப்படை பின்னணியில் இருந்தது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாகாண சபைப் பிரதிநிதிகள் இதுபற்றி என்ன நடவடிக்கை எடுத்தனர்? அடுக்கடுக்காக நடந்த அனர்த்தங்களினால், ஒரு இலட்சத்து இருபதினாயிரம் முஸ்லிம்கள் அகதிகளாக்கப்பட்டனர், இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிங்களின் வீடுகள் கொள்ளையிடப்பட்டும், தீக்கிரையாக்கவும் பட்டன இருபத்தி ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகள் மற்றும் கால்நடைகள் கொள்ளையிடப்பட்டன, ஐம்பதினாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட விவசாயம் பாழாக்கப்பட்டது எல்லா அனர்த்தங்களுக்கும் முழுப்பொறுப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும், அதன் தலைவர் தவிசாளர், மாகாணசபை உறுப்பினர்களுமே.

# அதிகாரப் பகிர்வும் வட-கிழக்கு மாகாண முஸ்லிங்களும்

**வடகிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கும் அதிகாரப் பகிர்வுக்குமாக அண்மையில் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி சமர்ப்பித்த மகஜர்.**

சென்றஇதழின் 20-2-1990-

(4ஆம் பக்கத்தொடர்ச்சி)

காலத்துக்குக் காலம் ஆறுதல் வார்த்தைகளும், வாக்குறுதிகளும் அரசியல் தலைவர்களால் வழங்கப்படுகின்றபோதும் உண்மையான அதிகார பிரயோகத்தில், எடுக்கப்படும் ஒவ்வொரு முயற்சியும் முஸ்லிங்களின் இன உரிமைகளையும் தனித்துவத்தையும் அழித்து ஒழிப்பதற்கும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் போலத் தோன்றுகின்றன. தற்போதைய நிலையில், அக்கறையுடன் அவதானித்து, பொருத்தமான முறையில் முஸ்லிங்களின் இன ரீதியானதும், சட்ட பூர்வமானதுமான உரிமைகளைப் பெற்றெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய, காலகட்டம் வந்துவிட்டது, ஆகவே இது தொடர்பாக, முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி பின்வரும் பிரேரணைகளைச் சமர்ப்பிக்க விரும்புகின்றது:

கீழ தரப்பட்டவாறு, வடக்கு. கிழக்கு மாகாணங்களிலுள்ள இலங்கை முஸ்லிமகளின பாரம்பரிய வதிவிடங்கள் உள்ளடக்கப்பட்ட ஒரு சுதந்திரபூர்வமான முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபை உருவாக்கப்பட, உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்:

1. பிரத்தியேகமான முஸ்லிம் பெரும்பான்மை மாவட்டமொன்று தற்போதைய அம்பாறை மாவட்டத்தில் அமைக்கப்படவேண்டும். இது பாணமைப்பற்று, அக்கரைப்பற்று, சம்மாந்துறைப் பற்று கரவாகு/நிந்தவூர்ப் பற்று ஆகிய இறைவரி உத்தியோகத்தர் பிரிவுகளையும், வேவகம்பற்று தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவினையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

2. மேற்படி புதிய நிருவாக மட்டத்திலுள்ள ஒவ்வொரு சமூகத்தினதும் குடிசன விகிதாசாரப்படி, பாரம்பரிய வசிப்பிடங்கள், விவசாயக் காணிகள், இயற்கை வளங்கள் உள்ளடக்கப்பட்ட இன ரீதியான பிரதேச சபைகள்/ உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

3. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 24வீதம் முஸ்லிம் குடிசன விகிதாசாரப்படி காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி/வாழைச்சேனை ஆகிய பகுதிகளில், பாரம்பரிய வசிப்பிடங்கள் தொழில்துறைக்கான நிலபுலன்கள், இயற்கை வளங்கள் ஆகியன உள்ளடக்கப்பட்ட, முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச சபைகள்/ உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

4. திருகோணமலை மாவட்டத்திலுள்ள 29% முஸ்லிம் குடிசன விகிதாசாரப்படி, கிண்ணியா, மூதூர், தோப்பூர் தம்பலகாமம் ஆகிய பகுதிகளில், பாரம்பரிய வசிப்பிடங்கள் தொழில்துறைக்கான நில புலங்கள், இயற்கை வளங்கள் ஆகியன உள்ளடக்கப்பட்ட முஸ்லிம பெரும்பான்மை பிரதேச சபைகள் / உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

5. மன்னார் மாவட்டத்திலுள்ள 27 வீதம் முஸ்லிம் குடிசன விகிதாசாரப்படி, எருக்கலம்பிட்டி, முசலி ஆகிய பகுதிகளில் பரம்பரை வசிப்பிடங்கள், தொழில் துறைக்கான நிலபுலன்கள், இயற்கை வளங்கள் ஆகியன உள்ளடக்கப்பட்ட முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேச சபைகள்/ உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

6. சம்மாந்துறை, காத்தான்குடி, கிண்ணியா ஆகிய பகுதிகளில் அவ்வப் பிரதேசங்களிலுள்ள பிரதேச சபைகளை முஸ்லிம் பெரும்பான்மை குறையாதவாறு, நகர சபைகள் உருவாக்கபபடுதல் வேண்டும்.

7. கல்முனையில் அப்பிரதேசத்திலுள்ள பிரதேசசபையின் முஸ்லிம் பெரும்பான்மை குறையாதவாறு, மாநகர சபையொன்று உருவாக்கப்படுதல் வேண்டும்.

8, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் மாவட்டங்களிலுள்ள முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச சபைகள் / உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள், உள்ளுராட்சி அமைப்புக்கள் ஆகியன ஒற்றிணைக்கப்பட்டு. பிரத்தியேக முஸ்லிம் நிருவாக மாவட்டங்கள் பிரஸ்தாப மாவட்டங்கள் தோறும அமைக்கப்படுதல் வேண்டும்.

9 வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உருவாக்கப்பட்ட எல்லா முஸ்லிம நிருவாக மாவட்டங்களும் பிரத்தியேக முஸ்லிம் தேர்தல் மாவட்டங்களாகக் கருதப்படவேண்டும்.

**முஸ்லிம் பெரும்பான்மை மாகாணத்துக்கு மாற்றீடாக ஒன்றிணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களில முஸ்லிங்கள் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான பிரேரணைகள் பின்வருமாறு:...**

தமிழர்களினதும் முஸ்லிம்களினதும பாரம்பரிய வதிவிடங்களான ஒற்றிணைந்த வடக்கு-கிழக்கு மாகாணங்களில், முஸ்லிங்கள் தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்கான அரசியலமைப்பு ஏற்பாடுகள் உருவாக்கப்படுதல் வேண்டும்,

1. ஏற்கனவே முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபைக்கான பிரேரணையில் காட்டப்பட்டவாறு, முஸ்லிம் இன ரீதியிலான தேசிய அரசியல, நிருவாக உப பிரிவுகள் உடனடியாக உருவாக்கப்படுதல் வேண்டும்.

2 முஸ்லிம் இன ரீதியான தேசிய அரசியல் நிருவாக உப பிரிவுகளில் சட்டமும், ஒழுங்கும் நடைமுறைபபடுத்தும் பொறுப்பு முஸ்லிமகள் கைவசம் விடப்படுதல் வேண்டும.

3. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிங்கள் தமது சட்ட பூர்வ உரிமையான ஒரு பிரத்தியேக மாகாணத்தை தியாகம் செய்யவேண்டியுள்ளதால், ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையின். 30 வீதத்துக்கு குறையாத உறுப்பினர்களைத்தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கும் உரிமையும் வாய்ப்பும் முஸ்லிம்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

4. ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவையில் முக்கிய அமைச்சுக்களை உள்ளடக்கிய 30 வீதத்துக்கு குறைவில்லாத அமைச்சர் பதவிகள் முஸ்லிம் இன ரீதியான தேசிய அரசியல் நிர்வாக உப பிரிவுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் முஸ்லிம்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும.

5. ஒரு முஸ்லிம், முறையாக முதலமைச்சராக நியமிக்கப்படாத பட்சத்தில், பிரதி முதலமைச்சராக ஒரு முஸ்லிம், முஸ்லிம் இனரீதியான தேசிய அரசியல், நிருவாக உப பிரிவுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடையேயிருந்து நியமிக்கப்படுதல் வேண்டும.

6. முஸ்லிம்களுக்கான அரசகாணியுரிமை கிழக்கு மாகாணத்தில் 35 வீதம் குறைவில்லாமலும், மன்னார் மாவட்டத்தில் 30 வீதம் குறைவில்லாமலும் வடக்கு மாகாணத்தின் ஏனைய பிரதேசங்களில் 5வீதம் குறைவில்லாமலும் அமைதல் வேண்டும்.

7. பல்கலைக் கழக மட்டம் வரையிலான பிரத்தியேக கல்வி வசதிகள் முஸ்லிங்களுக்கு வழங்கப்படுதல்வேண்டும்.

8. பிரத்தியேக ஒலிபரப்பு, தொலைக்காட்சிப் பிரிவுகள் முஸ்லிங்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

9. ஒன்றிணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மாவட்ட குடிசன இன விகிதாசாரப்படி முஸ்லிங்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படுதல் வேண்டும்

10. முஸ்லிங்களின் உரிமைகள், அபிலாஷைகள் ஆகியவற்றையும், முஸ்லிம் இனரீதியான தேசிய அரசியல் நிருவாக உப பிரிவுகளின், அதிகாரம் நடைமுறை ஆகியவற்றையும் அத்துமீறக் கூடிய எவ்வகை சட்டவாக்கங்களும் முஸ்லிம் இன ரீதியான தேசிய அரசியல், திருவாக உப-பிரிவுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் நான்கில் மூன்று(4/3) பங்கு உறுப்பினர்களின் ஆதரவு இல்லாமல், ஒன்றிணைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்படலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் செய்தி
THE CEYLON MUSLIM NEWS
الاخبار المسلمون

# முஸ்லிங்களின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முஸ்லிங்கட்சிகள் காட்டும் அக்கறைகள்!

### முஸ்லிம் மாசிகை 'எழுச்சிக்குர' லின் ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்

வடக்கு - கிழக்கில் நிரந்தர அமைதியையும், சமாதானத்தையும் நிலைநாட்ட வேண்டும்' என்பதில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட, ஜனாதிபதி ஆர். பிரேமதாசவினால் உருவாக்கப்பட்ட 'வடக்கு-கிழக்கு மாகாண சமாதானக் குழு'வின் தலைவராக உயர் கல்வி விஞ்ஞான, தொழில் நுட்ப அமைச்சர் அல்ஹாஜ் ஏ. சீ. எஸ். ஹமீது நியமிக்கப்பட்டுள்ளார். இக்குழுவில் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சகல தமிழ் முஸ்லிங் கட்சிகளும் அங்கம் வகிக்கின்றன.

அமைச்சர் ஹமீதினால் கூட்டப்பட்ட சமாதானக்குழுக் கூட்டங்களில் பங்குபற்றி, முஸ்லிங்களுக்கான நிரந்தரத் தீர்வு ஒன்றினைப்பெற முனைவதில், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியை விட முஸ்லிங் காங்கிரசுக்கே அதிக பங்கும் கடமைப்பாடும் உண்டு. இஸ்லாம், குர்ஆன் ஹதீஸ் அடிப்படையிலான அரசியல் அணுகுமுறை, வடக்கு - கிழக்கு மாகாண முஸ்லிங்களுக்கு முஸ்லிம் மாகாணம் ஒன்றுதான் பாதுகாப்பு அரண் என்றெல்லாம் பிரச்சாரம் செய்துதான் மாகாண சபை, பாராளுமன்றங்களில் இவர்கள் பதவிகளைக் கைப்பற்றினார்கள். ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் தனது கடமையினைத் திருப்திகரமாகச் செய்கின்றதா என்பதில் முஸ்லிம்கள் மத்தியில் ஐயப்பாடும் வினாக்குறியும் எழுந்துள்ளது.

ஆட்சி அதிகாரப்பகிர்வில் முஸ்லிங்களின் எதிர்கால நிலைமை தொடர்பாக மு ஐ வி. முன்னணியின் செயலாளர் நாயகம், அல்-ஹாஜ் எம் ஐ எம். முஹிய்யதீன் காட்டிய அக்கறை, தயாரித்து வழங்கிய செயற்திட்டங்கள், ஆவணங்கள், ஆலோசனைகள் என்பன மிகவும் பெறுமதிமிக்கவையாக மதிக்கப்படுகின்றன. முஸ்லிம் காங்கிரஸ் உட்பட அனைத்துக் கட்சிகளினாலும் மிகக்கூடிய அளவு பொருத்தமானவை என ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் இது போன்ற எத்தகைய ஆலோசனைகளோ பிரேரணைகளோ இதுவரை முன்வைக்கப்படவில்லை.

அமைச்சர் ஹமீது கூட்டிய இரு கூட்டங்களில் கலந்து கொண்ட காங்கிரஸ் தலைவர் எம் எச். எம். அஸ்ரப் ஒரு கூட்டத்தில் மௌனம் சாதித்துள்ளார், இன்னொரு கூட்டத்தில் சில கருத்துக்களை மட்டும் தெரிவித்துள்ளார். மூன்றாவது கூட்டத்தில் கலந்து கொண்ட வன்னிமாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் அல்ஹாஜ் எஸ் எஸ் எம் அபூபக்கர், மு. ஐ வி. முன்னணியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரேரணைகளை மிகவும் பொருத்தமானவை யென்று ஆதரித்தும் பாராட்டியும் பேசியுள்ளார். அத்துடன் தமது தலைவரின் சம்மதத்தின் பேரில் தான்: குறித்த கருத்துக்களைத் தெரிவித்ததாக ஒப்புக்கொண்டுள்ளார்.

ஆனால் மறுநாள் நடந்தது என்ன? மு. கா. தலைவர் அஷ்ரப் அவற்றுக்கு முற்றிலும் மாறான கருத்துக்களைக் கொண்ட பத்திரிகை அறிக்கையினை வெயிட்டார் அது மட்டுமன்றி அதற்கு பின்னர் நடைபெற்ற கூட்டங்களில், காங்கிரஸ் சார்பில் எவருமே கலந்து கொள்ளவில்லை வடக்கு கிழக்கு முஸ்லிங்களின் எதிர்காலத் தலைவிதி வரையப்படுவது சம்பந்தமாக நடைபெறும் கூட்டங்களில், அலட்சியப் போக்குடனும், அன்னியத் தன்மையுடனும் அக்கறையின்றியும் முஸ்லிம் காங்கிரஸ் நடந்து கொள்வதன் காரணம் என்ன?

பிரச்சினைக்கான பரிகாரம் தம்வசம் இல்லை என்பதினால் முஸ்லிம் ஐ வி. முன்னணி வழங்கும் தீர்வினை ஏற்றுக்கொள்வது கௌரவக் குறைச்சல் என முஸ்லிம் காங்கிரஸ் கருதுகின்றதா அல்லது? முஸ்லிம்களின் அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் வெறும் கோசங்களை விரசுர்ச்சனைகளாக்கி அரசியல் நடாத்தும் அத்தியாயம் முடிவுக்கு வந்துவிடும் என எண்ணுகின்றதா? அல்லது முஸ்லிம் மாகாணம் போன்ற உணர்ச்சியூட்டும் கவர்ச்சிக் கோசங்கள் நிறைவேற்றப்படாது வெறுங்கனவாக இருந்தால்தான், காங்கிரஸ் ஒரு அரசியல் தொடர்கதையாக விளங்க முடியும் என அது எதிர்பார்க்கின்றதா!

முஸ்லிங்களுக்கு இப்போது தேவை வெறும் கோசங்களோ. வாய்வீரங்களோ மேடைமுழக்கங்களோ கடதாசி அறிக்கைகளோ அல்ல தன்மானத்துடன், தலைநிமிர்ந்து உரிமைகள் பெற்று வாழ்வதற்கான அத்திவாரமே இடப்படல்வேண்டும். இச்சவாலை முஸ்லிம்காங்கிரஸோ, மு. ஐ. வி. முன்னணியோ எது செய்தாலும் அதனை ஏற்க மக்கள் ஆயத்தமாக உள்ளார்கள்,

தேர்தல் மூலம் மக்கள் அங்கீகாரம் பெற்றுள்ள ஒரே காரணத்துக்காக முஸ்லிம் காங்கிரஸின் அனைத்துச் செயற்பாடுகளும் சரியானவை, வேதவாக்கானவை என்பதல்ல. அதேவேளை முஸ்லிம் ஐ வி, முன்னணிக்கு தேர்தல் அங்கிகாரம் இல்லை என்பதற்காக பெரும்பாலான முஸ்லிம் புத்திஜீவிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதன் தீர்வுகள் அர்த்தமற்றது என்பதுமல்ல. முஸ்லிம் காங்கிரசும் மு. ஐ. வி. முன்னணியும் முஸ்லிங்களின் உரிமைகளை பாதுகாப்பதனை மையமாக கொண்டு உருவாக்கப்பட்ட கட்சிகளே.

அவற்றுக்கு முஸ்லிங்களின் நலன்தான் முக்கியமே தவிர தனிப்பட்ட ஒரு அஸ்ரப்புக்கும், முஹிய்யத்தீனுக்குமிடையிலான, அரசியல் கட்சி போட்டியோ கௌரவக் குறைச்சலோ முக்கியமல்ல என்பதை இருதரப்பினரும் உணரவேண்டும். அவர்கள் முஸ்லிம் சமுதாயத்தின் நன்மைக்காக சகல குரோதங்களையும் மறந்து ஒன்றுபட்ட, ஒருமுகப்படுத்தப்பட்ட கருத்துக்களைத் தொகுத்துச் சமர்ப்பிக்க வேண்டும். என இஸ்லாத்தின் பெயரால் வினயமாக வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இதேவேளை முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி மீதுள்ள மிக முக்கியமான பொறுப்பினை அது மறந்து விடக்கூடாது புலிகள் இயக்கம் மிகப் பலவீனமாக இருந்த காலத்தில் அது செய்து கொண்ட ஒப்பந்தத்தினை, புலிகள் பலத்துடனும் புதிய அரசியல் வாய்ப்புடனும் திகழுகின்ற இன்றைய காலகட்டத்தில் மீள் பரிசீலனை செய்து அதன் அடிப்படையில் முஸ்லிங்களின் பிரச்சனைகளுக்கான தீர்வுகளை வரைந்துகொள்ள மு. ஐ வி முன்னணி முன்வரவேண்டும் புலிகள் இயக்கம் தமக்கு அழைப்பு விடுக்கும் வரை தாமதிக்காது தாமாகவே புலிகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்டு இந்த அவசியதேவையினை நிறைவேற்ற அது முன்வரவேண்டும்.

வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் விவகாரத்தில் ஏனைய கட்சிகள் தீவிரவாத இயக்கங்கள் விட்ட தவறுகளை, புலிகள் இயக்கமும் பின்பற்றமாட்டாது என்பதில் முஸ்லிம் சமுதாயம் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளது. வடகிழக்கு முஸ்லிம்களின் ஒவ்வொரு பிரச்சினையிலும் இதயபூர்வ அக்கறையுடன் கலந்து கொண்டு பணியாற்றிய பழுத்த அரசியல்வாதியான கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் இந்தவிடயத்தில் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு சகலவழிகளிலும் பக்கபலமாக நின்று ஆலோசனை வழங்கி வழி நடத்த முன் வரவேண்டும். அமைச்சர் ஹமீது அவர்கள் தாம் கைமேற்றுள்ள புனிதப் பணியில் நிச்சயம் தனது முத்திரையைப் பதிப்பார் என்று முஸ்லிங்கள் மட்டுமன்றி தமிழ் சிங்கள மக்களும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றனர்.

நன்றி: எழுச்சிக் குரல்.
பெப்ருவரி 1990

## விநோதப் போட்டி

# எது துரோகம்? கண்டு பிடியுங்கள்!

### போட்டிநிபந்தனைகள்:-

1. கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ள முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் கடந்தகால நடவடிக்கைகளில் எது துரோகமானது என்பதைக் கண்டுபிடித்து அதற்கான விளக்கத்தை 5வரிகளுக்கு மேற்படாமல் போட்டியாளர்கள் குறிப்பிடல்வேண்டும்

2. போட்டியாளர்கள் தவறாது தங்கள் பெயர், முகவரி அடங்கிய விபரங்களை இணைத்தல்வேண்டும்' முகவரிகள் தற்போதைய முகவரிகளாக இருக்கவேண்டும்.

3. இப்போட்டியில் முஸ்லிம் கட்சிகளைச்சேர்ந்த பிரபல அரசியல் வாதிகள் மட்டுமே கலந்துகொள்ளலாம்.

4. 'பிரபலம்' என்பதை உறுதிப்படுத்த பஜிரோ ஜீப்புக்கள் வைத்திருப்பதாக சான்றுகள் சமர்ப்பிக்கப்படவேண்டும் பஜிரோ ஜீப்புக்களின் இலக்கங்கள் குறிப்பிடப்படுவது திருப்தியக்ககூடிய சான்றாகக் கருதப்படும்

5. பஜிரோ ஜீப்புக்களைக் கூட்டுடைமையாக வைத்திருப்பவர்கள் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்ப அருகதையுடையவர்கள் எனினும் அவர்கள் ஜீப் இலக்கத்துடன் கூட்டுடைமை என்று தவறாது குறிப்பிடல்வேண்டும்.

6. போட்டி முடிவுகள் பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை முஸ்லிம் செய்தி ஆசிரியருக்கு மட்டுமே உண்டு

முடிவுத்திகதி:- போட்டிக்கான விண்ணப்பங்கள் 1990 ஏப்ரல் 20ஆம் தேதிக்கு முன்னர் எமது காரியாலயத்துக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும்.

முக்கியகுறிப்பு: வெற்றியீட்டியவர்களுக்கு பணப்பரிசுகளோ தங்கப்பதக்கங்களோ வழங்கப்படமாட்டாது முஸ்லிம் ஐக்கியவிடுதலை முன்னணியிடம் வெளிநாட்டுப்பணத்தின் தாராளப்புழக்கம் இல்லையென்பதனால் பணப்பரிசுகள் வழங்கி மகிழ்விக்கமுடியாத நிலையிலுள்ளோம் என்பதை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

### போட்டி விடயங்கள்:-

1. வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் பங்குபற்றவேண்டாம். முஸ்லிம் சமூகத்தின் எந்தவிதமான பாதுகாப்பும் உத்தரவாதப் படுத்தப்படாத நிலையில் ஒரு மாகாணசபை அரசு [illegible] வாக்கும் முயற்சிக்கு ஆதரவளிக்கவேண்டாம். அது [illegible] வாகி எமது சமூகத்தை அனுதைகளாக்கவும், அகதிகளாக்கவும் இடமளிக்க வேண்டாமென்று பிரசுரம் வெளியிட்டுப் பிரச்சாரம் செய்தமை.

2. முஸ்லிம்களுக்கு பாதுகாப்பும் உரிமையும் வழங்கவல்ல முஸ்லிம் மாகாணத்தைப் பெற்றுக் கொள்ளும் அரியசந்தர்ப்பத்தை நழுவவிடவேண்டாம் என்று ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிங்களுக்கு பகிரங்கமான கோரிக்கைகள் மூலம் வேண்டுகோள் விடுத்தமை

3. இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தால் அனாதைகளாகக் கைவிடப்பட்ட வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்களின் எதிர்காலம் அச்சுறுத்தலுக்குள்ளாகிய சமயம், இலங்கை அரசோ, ஏனைய முஸ்லிம் கட்சியோ அதுபற்றி அலட்டிக்கொள்ளாமல் நிம்மதியாக ஒதுங்கிக்கொண்டிருந்தவேளை, தமிழ்ச் சமூகத்துடன் இணக்கமாகபேசி ஐக்கியத்தை வலியுறுத்தி, முஸ்லிம் சமுகத்தின் பாதுகாப்புகளும் உரிமைகளுக்கும் உரிய உத்தரவாதங்களை உடன்படிக்கை மூலம் உறுதிப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

4. இந்திய அமைதிகாக்கும் படையை வெளியேற்ற இலங்கைஅரசு நடவடிக்கைகள் எடுத்த சமயம், எல்லா அரசியல் கட்சிகளும் சிங்கள மக்களும் அதற்கு பரிபூரணமான ஆதரவு கொடுத்து தேசாபிமானத்துடன் நடந்து கொண்டபோது, முஸ்லிம் காங்கிரஸ் இந்தியப் படை வெளியேறக்கூடாது என்று பிடிவாதம் பிடித்தது. இதனால் இலங்கையிலுள்ள பெரும்பான்மைச் சிங்களவர்களின் குரோதம் முஸ்லிங்கள் மீது திரும்பத்தொடங்கிய போது, சிங்கள மக்களிடையே அச்சத்துடன் வாழ்ந்து கொண்டிருந்த முஸ்லிம் சகோதரர்களின் பாதுகாப்பைக் கருதியும், தேசத் துரோகிகள் என்ற அவதூறு முஸ்லிங்கள் மீது வந்து சேரக் கூடாது என்ற அக்கறையிலும், இந்தியப் படை வெளியேறவேண்டும்' என்று ஆணித்தரமாக எடுத்துக் கூறி பத்திரிகையில் பிரசுரித்து அதனை பகிரங்கப்படுத்தியமை.

5. முஸ்லிங்களின் நலனுக்கு விரோதமாகச் செயற்பட்டு வந்த வடக்குகிழக்கு மாகாண அரசு, இந்தியப்படை வெளியேறும் பட்சத்தில் விடுதலை புலிகளிடமிருந்து தம்மைப் பாதுகாக்கவென்று உருவாக்கிய தமிழ்தேசிய இராணுவத்தின் பயிற்சிக்கென முஸ்லிம்களை வலுக்கட்டாயமாக சேர்க்கும் முயற்சிகள் முஸ்லிங்களின் பாதுகாப்பு என்ற போர்வையில் நடந்தபோது அந்த இராணுவத்துக்கு முஸ்லிம் இளைஞர்களைப் பயிற்சிக்கு அனுப்பிப்பலியாக்காதீர்கள் என்று வேண்டிக்கொண்டமை.

6. பதவிகள் பிடிக்கும் வெறித்தனத்துக்கும், அற்ப அரசியல் லாபத்துக்கும். புனித இஸ்லாத்தை சாதனமாக்கி, மக்களை முட்டாள்களாக்கி, கேடுகெட்ட நடைமுறைகளையும் காடைத்தனத்தையும் இஸ்லாமிய அரசியலாக வெளிக்காட்டி பிறசமயத்தவர்கள் எம்மை கேலி செய்யும் படியாக நடந்து கொள்ளாது விட்டமை.

7. எமது இளைய தலைமுறையினரை எதிர்காலச் சமுதாயச் சிற்பிகளை இனவெறியூட்டி அவர்களது வாயில் துப்பாக்கிகளைக் கொடுத்து தமது சொந்தச் சகோதரர்களையே கொலை செய்யும்படியான வன்மத்தை அவர்கள் உள்ளத்தில் வளர்த்து அவர்களைக் கொலைவெறியர்களாக தயார்க்காது ஒதுங்கிக்கொண்டமை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் செய்தி
THE CEYLON MUSLIM NEWS
الأخبار المسلمون

# முஸ்லிம் காங்கிரஸ் நடவடிக்கைகள் தவறானவை

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களாகிய எமக்கு தற்போதைய சூழ்நிலையில் ஏற்படக்கூடிய ஆபத்துகளிலிருந்து எம்மை பாதுகாத்து எமது இன உரிமைகளுக்கும் மேம்பாட்டிற்கும், நிரந்தரமான உத்தரவாதம் அளிக்கக்கூடிய யதார்த்த பூர்வமானதும் தூரதிருஷ்டி வாய்ந்ததுமான ஒரு கொள்கைத் திட்டத்தை முன் எடுத்துச் செல்ல வேண்டிய ஒரு கட்டாய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

எமது சமுதாயத்தில் ஏற்கனவே ஒரு முஸ்லிம் அரசியல் கட்சி தன்னை நிலைப்படுத்திக் கொண்டுள்ளதை முழுமையாகத் தெரிந்திருந்தும் நாம் ஆக்கபூர்வமான ஒரு திட்டத்தை முன்வைக்கும் போது இது முஸ்லிம் சமூகத்தைப் பிளவுபடுத்தும் செய்கை என்ற அங்கலாய்ப்பை பரவலாக ஏற்படுத்தலாம். எனினும் எமது சமுதாயத்தை குறிப்பாக வடக்கு கிழக்கு முஸ்லிம்களை சரியான பாதையில் வழிநடத்திச் செல்ல வேண்டியது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு இலேசாகத் தட்டிக்கழிக்க முடியாத கட்டாய கடமையாக அமைந்துள்ளது.

தேசிய அரசியல் கட்சிகளின் புறக்கணிப்புக்கும் பரிகாரம் கண்டு இன உரிமைகளை வென்றெடுக்கவே முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஏற்படுத்தப்பட்டன ஒன்றுக்கு மேற்பட்ட முஸ்லிம் கட்சிகள் போட்டியிட்டால் முஸ்லிம் மக்கள் பிளவுபட்டு விடுவார்கள் அது தவிர்க்கப்படவேண்டும் என்பதற்காகவும் முஸ்லிம் அரசியல்கட்சி முஸ்லிம்களிடையே பிரபல்யம் பெறவேண்டும் என்பதற்காக முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி இற்றைவரை எந்த தேர்தலிலும் கலந்து கொள்ளாமல் அவதானமாக இருந்து முக்கியமான சந்தர்ப்பங்களில் எனது கருத்தை மட்டும் தெரிவித்து வந்துள்ளது.

ஆனால், ஜமாஅத்தே இஸ்லாமி, ஜம்மியத்துல் உலமா, மற்றும் ஒருசில முஸ்லிம் தேசிய இளைஞர் இயக்கங்கள் ஒன்று சேர்ந்து பேராதரவு கொடுத்து தேர்தலில் வெற்றிவாகை சூடிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஓராண்டு கால அரசியல் நடவடிக்கை அனைத்து முஸ்லிம் இயக்கங்களையும் இன்று வெட்கித் தலைகுனியவைத்துள்ளது முஸ்லிம் காங்கிரசின் அரசியல் நடவடிக்கை முழு முஸ்லிம் சமூகத்தின் நலன்களுக்கும் முற்றும் முரணாக அமைந்திருக்கிறது. இதனால் இன்று முஸ்லிம்கள் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம்கள் பெரும் அச்சமும் பீதியும் கொண்டுள்ளார்கள் இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம் காங்கிரசுக்கு ஆதரவு கொடுத்த பொறுப்பு வாய்ந்த முஸ்லிம் இயக்கங்களான ஜமாஅத்தே இஸ்லாமி, ஜம்மியத்துல் உலமா, முஸ்லிம் இளைஞர் நிறுவனங்கள் ஏன் முஸ்லிம் காங்கிரசின் நடவடிக்கை பற்றி இன்னும் எந்த அபிப்பிராயமும் தெரிவிக்கவில்லை?

1 ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஆதரிக்கவில்லை என்று கூறிக்கொண்டு இந்திய இராணுவம் வடக்கு கிழக்கில் நிலை கொண்டிருப்பதை மிகவும் ஆணித்தரமாக ஆதரித்ததன் அர்த்தம் என்ன?

2. ஒன்றிணைந்த வடகிழக்குமாகாண சபையை நிராகரிப்பதாககூறிவரும் முஸ்லிம் காங்கிரஸ் இந்தியாவின் வேண்டுதலின் பேரில் என்ன காரணத்துக்காக ஒன்றிணைந்த மாகாணசபை தேர்தலில் போட்டியிட்டு மாகாண சபை ஏற்படுத்துவதற்கு ஆதரவு கொடுத்தது?

3. வடகிழக்கு மாகாண முஸ்லிங்களின் பாதுகாப்புக்கு இந்திய இராணுவமும் தமிழ் தேசிய இராணுவமும் பெரும் அச்சுறுத்தலாகவும், ஆபத்தாகவும் இருப்பதைஅறிந்தும்எதற்காக முஸ்லிம் இளைஞர்களைத் தமிழ் தேசிய இராணுவத்தில் சேர்த்து இந்திய இராணுவத்தால் பயிற்றுவித்தது?

4. வரதராஜப் பெருமாள் கொடுத்ததாகக் கூறிய சட்டவிரோத இந்திய போர்கருவிகளை முஸ்லிம்களுக்கு எதிராக அக்கரைப்பற்று,சம்மாந்துறை நிந்தாவூர், காத்தான்குடி ஆகிய பகுதிகளில் முஸ்லிம் காங்கிரஸ் பாவிக்கவில்லை என்று கூற முடியுமா? ஏன் இந்த ஆயுதங்கள் இன்னும் கையளிக்கப்படவில்லை.

5. முஸ்லிம் காங்கிரஸ் அக்கரைப்பற்று உப்புக்கரச்சியில் சட்டவிரோதமாகப்பயிற்சி கொடுக்கவில்லை என்பதையும், அவர்கள் பல முஸ்லிம்களைப் பகிரங்கமாகத் துப்பாக்கிமுனையில் அச்சுறுத்திப் படுகொலை செய்ய முயற்சித்ததையும் மறுக்க முடியுமா?

தவறான கொள்கைகளையும் சட்டவிரோத நடவடிக்கைகளையும் கொண்ட ஒரு கட்சி தேர்தல் ஆணையாளரால் அங்கிகரிக்கப்பட்ட முஸ்லிம் கட்சியாக இருப்பினும் அதன் தவறான கொள்கைகளும் கோட்பாடுகளும் இங்குள்ள முழு முஸ்லிம் சமூகத்தின் கொள்கைகளும் கோட்பாடுகளும் என்று ஏனைய சமுதாயமக்களையும், வெளி உலகத்தையும் நம்பவைக்கும் செய்கைகளை ஜமாஅத்தே இஸ்லாமி, ஜம்மியத்துல் உலமா ஆகிய முஸ்லிம் நிறுவனங்கள் தட்டிக்கேட்கத் தவறினாலும் சமுதாயபற்றுள்ள, தேச விசுவாசமுள்ள எந்த முஸ்லிமும் அங்கீகரிக்கவோ அனுமதிக்கவோ முடியாது.

# முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் பிரதிநிதிகள் அல்ல இந்தியாவின் கைக்கூலிகள்

கிழக்கு மாகாணத் தேர்தல் முடிந்தவுடன் 1988 நவம்பர் 27 ஆம் திகதி வெளிவந்த "சண்டே ரயிம்ஸ்" பத்திரிகைக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் "முஸ்லிம்களின் தொண்டமான்" என்ற தலைப்பின் கீழ் பேட்டியொன்று கொடுத்திருந்தார். அந்தப் பேட்டியில் கடைசியாக (5ம் பாகத்தி )

கேள்வி: கிழக்கு மாகாணத்தின் மாகாணசபைத் தேர்தல் பிரசாரத்துக்காக இந்தியாவிடம் உங்கள் கட்சி ஏராளமான உதவிகளைப் பெற்றது நன்கு தெரிந்த விஷயம். இது உங்களை இந்தியாவுக்கு எந்த வகையிலும் கடமைப்படுத்துகிறதா ?

பதில்: எஸ் எல். எம். சியைப் பொறுத்தமட்டில் இந்தியாவைப் பற்றிய எமது நிலை மிகவும் விளக்கமானது. இந்திய ஐ பி கே. எப் (இந்திய அமைதிப்படை ) எவ்வளவு விரைவாகவெளியேறவேண்டுமோ அவ்வளவு விரைவாக வெளியேறவேண்டும், ஆனால் ஐ பி. கே. எப் வெளியேற முன் வடக்கு கிழக்கில் நிலைமை சுமுகமாக மாற்றப்படவேண்டும் என்பதே எமது நிலை.

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்பதாக இந்திய ஐ பி. கே. எப் நாட்டைவிட்டு எந்தவித நிபந்தனையுமில்லாமல் விரட்டப்படவேண்டும் என்பதை எமது கட்சி ஆதரிக்காது. உடன்படிக்கை பற்றிய எமது கருத்து வேறுபாட்டை இந்தியா நன்கு அறியும். இந்தச் சூழலில் தான் மாகாணசபைத் தேர்தல் நடைபெற்றது.

இந்த எல்லா விளையாட்டிலும் இலங்கையே குற்றவாளி இந்தியா அல்ல என்பதில் நான் இப்போது திருப்தியடைகிறேன். இந்தியா எங்களுக்கு எரிபொருள் பாதுகாப்பு. போக்குவரத்து இன்னும் வேறு பல வகைகளிலும் உதவி செய்தது என்பது உண்மை.

ஆயினும் எஸ் எல். எம். சி. இந்திய அரசாங்கத்துக்கு கடமைப்படவில்லை, எனது கருத்துப்படி இந்திய அரசாங்கம் தான் எஸ் எல். எம். சிக்கு இரண்டு காரணங்களுக்காக என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

(1) தேர்தலுக்கு மதிப்பைக் கொடுத்ததற்காக.

(2) எஸ் எல் எம். சி கலந்து கொள்ள விட்டால் "இனி மேல் LTTE தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கக்கூடியவர்கள் அல்ல" என்ற நிலையை இந்தியா எடுத்திருக்க முடியாது. (தமிழர்கள் வாக்களிக்கப்போவதும் முஸ்லிம்கள் வாக்களிக்கப்போவதும் தான்) எஸ் எல். எம். சி. ஒரு தூண்டு சக்தியாகப் பயனளித்தது

பிரபாகரனின் முதுகெலும்பு முறிக்கப்பட்டுவிட்டது என்று யாராவது கூறினால் அந்தப் பெருமை எஸ். எல் எம், சிக்கே (ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கே) வரவேண்டும்" என்று கூறியுள்ளார்.

இந்தப் பத்திரிகைப் பேட்டியிலிருந்து முஸ்லிம்கள் அறிய வேண்டிய முக்கிய விஷயம்: இந்தியாவிடமிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெற்றுக்கொண்டகைக்கூலி மூன்று வேலைகளுக்கு என்பதாகும். இலங்கை அரசாங்கத்தை குற்றவாளி எனக் கூறுவதற்கும் கிழக்கு மாகாணத் தேர்தலுக்கு மதிப்புக்கொடுப்பதற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் LTTE பெருந் தலைவர் பிரபாகரனின் முதுகெலும்பை முறியடிப்பதற்காகவும். இந்த துரோகச் செயலுக்குத்தான் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்குக்கொடுத்தார்கள்

இந்திய அமைதிப்படை என்ற பெயரில் முஸ்லிம்களைக் கொன்று குவித்துச் சொல்லிடங்கா அவலுக்குத் தள்ளி புறத்தும் இந்திய இராணுவம் வெளியேறியதும் 24 மணித்தியாலத்தில் முஸ்லிம்கள் கொல்லப்படுவர் என்று கூறிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரப். தவிசாளர், இஸ்ஸதீன் உபதலைவர் நிஜாமுத்தீன் யாருக்காகப் பயந்து இப்படிப் பதறுகின்றனர். வாங்கியதையும் வாங்கிக் கொண்டு செய்ததையும் செய்துவிட்டு இப்போது திண்டாடுகின்றனர். அப்பாவிக் கிழக்கிலங்கை முஸ்லிம்களை நலமுக மாட்டிவிட்டிருக்கின்றனர். அதற்குக் கிழக்கிலங்கை முஸ்லிம்களே இவர்களின் அடாவடித்தனத்திற்கு நல்ல பாடம் கற்பிக்கவேண்டும். மன்னிக்கக்கூடியபாதகமிளைகளா இந்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இலங்கை முஸ்லிம்களுக்குத் தொடர்ந்து செய்து வருகிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஷ்மீர்

# தணியுமோ சுதந்திர தாகம்?

இந்தியாவின் ஆக்கிரமிப்பில் அடங்கியிருக்கும் காஷ்மீர், ஜம்மு பிரதேசங்கள், கடந்த பெப்ருவரி மாதம் தொட்டு, அமைதியிழந்து கொந்தளிக்கத் தொடங்கியுள்ளன. முன்னொருபோதும் இல்லாத வகையில், அங்கு வெடித்துள்ள மக்கள் புரட்சி, அப்பகுதிகளில் அடக்குமுறை வல்லாதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கும், இந்திய அரசுக்குப் பெருந் தலையிடியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது சுதந்திர தாகத்தினால் உந்தப்பட்ட காஷ்மீர் மக்கள் வெள்ளம் அங்கு அலையாக ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கின்றது சக்திமிக்க வேலை நிறுத்தங்களும், கடை அடைப்புக்களும் அரச நிருவாக இயந்திரத்தைச் செயலறச் செய்துள்ளன ஊரடங்குச் சட்டத்தையும் மீறிய மக்கள் வெள்ளம், தணியாத சுதந்திரத் தாகத்தை வெளிப்படுத்தும் கோஷங்களுடனும், வீரமிக்க பாடல்களுடனும், வீதிதோறும் 'கபன்' உடையணிந்து ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளது. 'இந்தியனே வெளியேறு', 'காஷ்மீரிகளின் எதிர்காலத்தை நிருணயிக்க இடங்கொடு', 'அப்பாவிக் காஷ்மீரிகளைக் கொல்லுவதை நிறுத்து' என்ற சுலோகங்களைத் தாங்கியவாறு. 'அல் ஜிஹாத்' காவோ, மாரோ யா ம ஜாவோ' (புனித ஜிஹாத் கீதம் பாடு! கொல்லு அல்லது செத்து மடி) என்ற வீரச்சுவை சொட்டும் பாடல்களும் தக்பீர் முழக்கங்களும் வானைமுட்ட இஸ்லாமிய அடிப்படையிலான வீரப்போராட்டம் அங்கு முளைகட்டத் தொடங்கி விட்டது.

காஷ்மீர் மக்களின் எழுச்சியை அடக்க இந்திய அரசு இராணுவ அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது. இந்திய இராணுவத்தின் துப்பாக்கிகள் நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்தன மேலும் நூற்றுக்கணக்கானோர் படுகாயமுற்றனர். இருந்தும் காஷ்மீர் மக்களின் எழுச்சியை அடக்க முடியாமல், இந்திய அரசு திணறுகின்றது. "இந்தக் கலவரங்களைப் பாகிஸ்தானே தூண்டிவிடுகின்றது" என்று பாகிஸ்தான் மீது, பழியைப் போடுகின்றது சர்வதேச ரீதியாக பாகிஸ்தான் மீது களங்கம் சுமத்துங் குற்றச் சாட்டுக்களைக் கட்டவிழ்த்து வருகின்றது. 'கஷ்டம் என்று வந்தால், ஜம்மு காஷ்மீர் மக்களுக்கு உதவ நாங்கள் தயங்கப்போவதில்லை' என்று பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனஸிர் பூட்டோ துணிச்சலோடு கூறிய கூற்றுக்கள், இந்தியாவை ஆத்திர மூட்டச் செய்துள்ளன இதனால் இந்தியா 'பாகிஸ்தான் எமது உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுகின்றது' என்று உரிமை பாராட்டிக் கூறி வருகின்றது.

இந்தியா காஷ்மீரில் பாராட்டும் உரிமை சட்டபூர்வமானதல்ல, சுதந்திர நாடாக விருந்த காஷ்மீரை இந்தியா தனது படைப்பலத்தால் பிடித்துக்கொண்டு 'அந்தப் பிரதேசத்து மக்களின் சுய நிருணய உரிமையை கருத்தறியும் மக்கள் வாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்க வேண்டும்' என்ற ஐ. நா. பாதுகாப்புக் கவுன்சிலின் தீர்மானத்தையும் உதாசீனப்படுத்திக்கொண்டு 42 ஆண்டுகளாக காஷ்மீர் மக்களின் உரிமைகளை நசுக்கி, அவர்களை அடிமைப்படுத்திக் கொண்டு வருகின்றது தற்போது காஷ்மீர் மக்கள் தமது அடிமை விலங்கை அகற்ற எழுச்சி கொண்டுள்ளனர். இன்று காஷ்மீரில் இந்திய அரசு நடந்து கொள்ளும் முறையைக் கண்டித்து காஷ்மீரின் முன்னாள் முதலமைச்சர் பாரூக் அப்துல்லா அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். 'காஷ்மீரில் இனப்படுகொலை நடக்கின்றது இதற்கு சர்வதேச விசாரணை நடைபெறவேண்டும்' என்று அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

இந்திய உபகண்டம் சுதந்திரம் பெற்றதன் பின்னர் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக இந்தியாவும், பாகிஸ்தானும் மூன்று தடவைகள் போரிட்டுக்கொண்டன 1971ல் நடைபெற்ற போரின் பின்னர் கடந்த பத்து ஆண்டுகளாக அந்த விவகாரம் நீறுபூத்த நெருப்பாக அடங்கியிருந்தது. கடந்த மாதம் பாரூக் அப்துல்லாவின் தலைமையிலான ஆட்சி, மத்திய அரசின் தலையீட்டினால், கலைக்கப்பட்டு கவர்னர் ஜக்மோகன் தலைமையில், கவர்னர் ஆட்சி ஏற்படுத்தப்பட்ட பின்னர், மீண்டும் அந்த விவகாரம் தீயாகக் கொழுந்து விட்டு எரியத் தொடங்கி விட்டது. அண்மையில் புதுடில்லிக்கு விஜயம் செய்த பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர், காஷ்மீர் விவகாரம் பிரச்சினைக்குரிய விடயம் ஆகையால் ஐ நா.பாதுகாப்புச் சபையின் தீர்மானத்துக்கமைய ஐ. நா. சபையின் கண்காணிப்பின் கீழ். கருத்தறியும் மக்கள் வாக்கெடுப்பின் மூலம் காஷ்மீர் மக்களின் எதிர்காலம் நிர்ணயிக்கப்பட வேண்டும்" என்ற பாகிஸ்தான் தரப்பு அபிப்பிராயத்தை வலியுறுத்திவிட்டு வந்தார் இருந்தும் பிடிவாதமாக இந்தியா 'ஜம்முவிலும் காஷ்மீரிலும் தனக்கு உரிமை இருப்பதாக அடம்பிடித்துக்கொண்டே வருகின்றது. சமீபத்தில் பங்களாதேஷுக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு இந்தர்குமார் குஜ்ரால் "காஷ்மீரை இந்தியா என்றுமே விட்டுக்கொடுக்காது. அது இந்தியாவின் பிரிக்கமுடியாத ஒரு பகுதி" என்று பங்களாதேஷிலிருந்தே அறிக்கை விட்டிருந்தார். நமீபியா சுதந்திரக் கொண்டாட்டத்தில் கலந்துவிட்டு நாடு திரும்பிய இந்தியப் பிரதமர் திரு விஸ்வநாத் பிரதாப்சிங். "காஷ்மீர் நெருக்கடி சம்பந்தமாக நாம் பாகிஸ்தானுடன் பேச்சு நடாத்தத் தேவையில்லை" என்று உதாசீனமாகக் கூறியுள்ளார்.

காஷ்மீர் மக்கள் முஸ்லிம்கள் அவர்கள் சமய கலாச்சாரரீதியாக பாகிஸ்தானுடன் மிகுந்த பிணைப்புக்கொண்டவர்களாகவே இருக்கின்றனர், 'காஷ்மீர் சுதந்திரமுள்ள ஒரு நாடாக இருக்கவேண்டும். அங்ஙனம் இல்லாவிடில் பாகிஸ்தானுடன் இணைக்கப்படவேண்டும்' என்பதில் உறுதியாக உள்ளார்கள். காஷ்மீர் மக்களுக்கு இன்னல்கள் ஏற்படும் போது அவர்களுக்கு உதவ வேண்டும் என்பதில் பாகிஸ்தானிய மக்கள் மிகுந்த கரிசனை உடையவர்களாகவே எப்போதும் இருந்து வந்துள்ளனர். இதன் காரணமாகவே பாகிஸ்தானும் இந்தியாவும் பல முறை மோதிக் கொண்டன. பஞ்சாபைச்சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சபிதா அபிதா உசைன் அண்மையில் பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் போது வெளியிட்ட கருத்துக்கள் காஷ்மீர் மக்கள் விடயத்தில் பாகிஸ்தானியர் கொண்டுள்ள அக்கறையைத் தெட்டத் தெளிவாக்குகின்றது. 'காஷ்மீர் மீதான உரிமை பிரச்சினைக்குரியது என்று எந்தப் பாகிஸ்தானியும் சொல்ல மாட்டான். எங்களை நாங்கள் பரந்த இஸ்லாமிய அடையாளங்களோடு இனங்கண்டு கொள்கின்றோம். காஷ்மீர் போராட்டம் என்பது இஸ்லாமியர்களின் காஷ்மீர் போராட்டம்" என்று அவர் கூறியுள்ளார்.

காஷ்மீர் மக்கள் இந்தியாவின் அடக்கு முறைகளுக்கு எதிரான புனிதப் போரில் இறங்கிவிட்டனர். இந்தியாவோ தனது முரட்டுத்தனமான பிடிவாதப் போக்கைத் தளர்த்துவதற்கு சிறிதும் இணங்குவதாக இல்லை: பாகிஸ்தானும் காஷ்மீர்மக்களின் விடயத்தில் தனக்குள்ள கரிசனையை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை, இந்த நிலை நீடிக்குமானால் அதன் விளைவு என்னவாகும் என்பதில் சர்வதேச சமூகம் மிகுந்த கவலை கொண்டுள்ளது. 'மீண்டும் ஒரு யுத்தம் இந்திய உபகண்டத்தில் வெடிக்குமா' என்ற நியாயபூர்வமான சந்தேகம் இன்று அரசியல் அவதானிகளிடையே எழுந்துள்ளது. பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனஸிர் பூட்டோ பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை ஒன்றின்போது 'முஸ்லிம் சமுதாயமும் பாகிஸ்தானும் இந்த நிலையைச் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? மக்களின் எழுச்சி வெறுமனே விஷமிகளின் வேலை என்று சொல்லி விட முடியாது. தம் நாட்டைக் காப்பதற்கு விழிப்புடனும், துடிப்புடனும் படைகள் தயாராக இருக்கின்றன" என்று கூறியுள்ளார். அப்படி ஒரு யுத்தம் இந்திய உபகண்டத்தில வெடிப்பதன்மூலம் காஷ்மீர் மக்களின் உரிமைகள் மீளப்பெறப்படுமா? அல்லது காஷ்மீர் மக்களின் எழுச்சி அரசியல் ரீதியான சமாதான அணுகுமுறைகளை உருவாக்கி அதன்மூலம் சுதந்திர காஷ்மீர் நாடு உருவாகுமா? காஷ்மீர் மக்களின் சுதந்திர தாகம் என்றுதான் தணியுமோ?

— அபு பிர்னூஸ் —

## தமிழர் விடுதலை...

(2-ம் பக்கத் தொடர்)

6. வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் வாழும் முஸ்லிம்களின் விகிதாசாரத்திற்குக் குறைவில்லாத விகிதாசாரத்தின்படி பொதுத்துறை வேலை வாய்ப்புக்களுக்கான உரிமையை முஸ்லிம்கள் கொண்டிருப்பர்.

7. பல்கலைக்கழக மட்டம் வரையிலான பிரத்தியேகக் கல்வி வசதிகள் முஸ்லிம்களுக்காக ஏற்படுத்தப்படும். பல்கலைக்கழகங்களுக்கான அனுமதியின்போது கல்வித் துறையில் பின்தங்கியுள்ள குழுக்கள், பிரதேசங்கள், பாடசாலைகள் என்பனவற்றிற்கு விசேட கவனிப்பு செலுத்தப்படும்.

8 முஸ்லிம்களது உரிமைகளை அக்கறைகளைப் பாதிக்கக் கூடிய எதுவித சட்ட வாக்கங்களும் அவற்றிற்கு முஸ்லிம் பிரதிநிதிகளில் பெரும்பான்மையினர் சார்பாக வாக்களித்தாலன்றி, வடக்கு கிழக்கு மாகாணசபையினால் நிறைவேற்றப்படலாகாது.

9 முஸ்லிம்களால் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் உட்படுத்தப்பட்டிருந்த ஏனைய விடயங்கள் தொடர்பில் எமது கருத்துக்களை நாம் தெரிவித்துள்ளோம். இவ்விடயங்கள் இருபகுதியினராலும் மேலும் பரிசீலிக்கப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன.

ஒப்பம்

M. சிவசிதம்பரம்
தலைவர்
த. வி. கூ

ஒப்பம்

A. அமிர்தலிங்கம்
செயலாளர் நாயகம்
த. வி. கூ

# முஸ்லிங்கள் சிந்தித்து ...

(8-ம் பக்கத் தொடர்)

1. முஸ்லிங்களுக்குள்ள மறுக்க முடியாத சுய நிர்ணய உரிமையை வலியுறுத்தும் அதே வேளையில் தம்மைத் தனிமைப்படுத்தலைத் தவிர்ப்பதோடு வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த மாநிலத்திலும், தேசிய மேல் மட்டத்திலும் தமக்குரிய இடத்தை எடுக்க வேண்டும்.

2. முஸ்லிம் இன ரீதியான இலக்குகளையும், நோக்கங்களையும் திட்டவட்டமாக வரையறுத்துக் கொள்வதுடன் நின்று விடாது பிரதேச, தேசிய ரீதியான பொது இலக்குகள் நோக்கங்களையும் வகுத்துக் கொள்ள வேண்டும்.

3 முஸ்லிங்கள் பத்தியில் உள்ள அரசியல் சமூக சக்திகள் ஒரு பொதுக் கொள்கை, பொது நோக்கு, பொது வேலைத் திட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் ஐக்கியப்பட வேண்டும்.

4. முஸ்லிங்கள் தமது எதிரிகளையும், நண்பர்களையும் சரியாக இனம் காண்பதும். எதிரியைத் தனிமைப்படுத்தியும் பலவீனப்படுத்தியும், தன்னையும் தனது நேச சக்திகளையும் ஒன்றுபடுத்திப் பலப்படுத்தி சரியான உபாயத்தை, பிரயோகித்து அரசியல் மார்க்கத்தைச் சீராகப் பின்பற்ற வேண்டும்.

இதற்கு முஸ்லிங்களிடையே முக்கியமாக வடக்கு கிழக்கு முஸ்லிங்களிடையே நிலவும் எல்லாவிதமான குரோதங்களும், மோதல்களும் முற்றாகவே நிறுத்தப்படுவது அவசியம்.

ஒன்றுபடுத்தும் காரணிகளை இனம் காண்பதும் முன்வைப்பதும் அவசியம். பகைமைகள், முரண்பாடுகளுக்கு மத்தியிலும் இணக்கத்திற்கும் நட்புக்கும் இணைப்புக்கும் வழி விடக்கூடிய தேடல்களில் மெய்யுணர்வோடு இறங்குவது உடனடித் தேவையாகும்.

முஸ்லிங்களின் நலன்களை, தேவைகளை, எதிர்பார்ப்புக்களை கண்டறிந்து கவனத்திற் கொள்வதன் மூலம் இந்த ஆக்கபூர்வமான சூழலைத் தோற்றுவிக்கலாம்.

1. முஸ்லிம் பாரம்பரிய பிரதேசங்களைப் பாதுகாப்பது.

2. முஸ்லிம் இனத்தின் பந்தோபஸ்தை உத்தரவாதப்படுத்துவது.

3. ஆட்சி அதிகாரப் பகிர்வில் முஸ்லிம் இன உரிமைகளை வென்றெடுப்பது.

4. இந்திய இராணுவத்தாலும், பயங்கரவாத நடவடிக்கைகளாலும் அழிந்த முஸ்லிம் பிரதேசங்களை கட்டி எழுப்புதல், புனரமைத்தல்,

5. இழப்புகளுக்குள்ளான முஸ்லிங்களுக்கான புனருத்தாரணப் பணிகளை மேற் கொள்ளுதல்,

6. முஸ்லிம் சமுதாயத்தில் ஜனநாயக-முற்போக்கு மாற்றங்களை நடைமுறைப்படுத்துவது.

7. முஸ்லிம் பிரதேசத்தைத் தொழில் மயமாக்க, விவசாயத்தை நவீன மயமாக்க, குடிசைக் கைத் தொழில். கடல் தொழில் கால்நடை வளர்த்தல் ஆகியவற்றினை அபிவிருத்தி செய்து மக்கள் மயப்படுத்திப் பலமான, சுயாதிபத்தியமான பொருளாதாரத்திற்கான அடித்தளத்தை இடத் திட்டமிட்டுச் செயற்படுவது.

8, முஸ்லிம்-கல்வி, கலை, கலாசாரத்தின் முழுமையான மலர்ச்சிக்கான திடமான அஸ்திவாரத்தை இடுவது.

9, முஸ்லிங்கள், குறிப்பாக இளந்தலைமுறை முகம் கொடுக்கும் கல்வி, தொழில் வாய்ப்பு, ஆரோக்கியம் உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைக் காண திட்ட ரீதியாக செயலாற்றுவது.

19. முஸ்லிம் இனத்தின் முழுமையான இன உரிமையை சுய நிர்ணயத்தைப் பாதுகாத்து உறுதிப்படுத்தக் கூட்டாக முன்னேறுவது,

இந்நோக்கங்களை, இலட்சியங்களைச் சாதிக்கத் தனித் தனி, பலதரப்பு சந்திப்புக்களையும் கூட்டங்களையும் நடத்தி முழுமையான, ஆக்கபூர்வமான செயலில் இறங்குவது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் செய்தி
THE CEYLON MUSLIM NEWS
الاخبار المسلمون

## வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும்

# முஸ்லிங்கள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்

ஆட்சி அதிகாரப் பகிர்வில் முஸ்லிங்களின் இன உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டுமானல் வடக்கு கிழக்கு முஸ்லிங்கள் சிந்தித்து, திட்டமிட்டுச் செயலாற்ற முன் வர வேண்டும்.

### செயல் திட்டத்திற்கான சிந்தனை

முஸ்லிம்களுக்கு வேண்டியது எமது மக்களுக்கும் எமது பாரம்பரிய வசிப்பிடங்களுக்கும் உறுதியான பாதுகாப்பு. சுதந்திரமான தொழில் துறைகளுக்கு நியாயப்படி எமக்குரித்தான நில புலன்கள். அரசியல் சுய நிருணய உரிமைக்கு உத்தரவாதம். மார்க்க கலாசார நடவடிக்கைகளுக்கும் பூரண சுதந்திரம். சிங்களவர் தமிழர் போன்று முஸ்லிங்களும் ஆட்சி அதிகாரங்களை சகல மட்டத்திலும் பகிர்ந்து கொள்வதற்கான சமமான வாய்ப்பு,

### எமது நிலைப்பாடு

1 இலஙகையில் சிங்களவர் தமிழர் போன்று முஸ்லிம்களும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட தேசிய இனத்தவர்.

2. தமிழருக்கு உள்ளது போல முஸ்லிம்களுக்கும் பாரம்பரிய பிரதேசம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உண்டு.

3. வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் பாரம்பரிய பிரதேசங்கள் தனித் தனியாகவே அமைந்திருக்கின்றன.

4 தமிழ் இனத்தவர் தமது பாரம்பரிய பிரதேசங்களில் தம்மைத் தாமே ஆள, தமது தலை விதியைத் தாமே நிர்ணயிக்க, தமது விவகாரங்களுக்கு தம் விருப்பிற்கமையத் தாமே தீர்வு காண உரிமை, அதிகாரம், உள்ளது போல முஸ்லிம் இனத்தவருக்கும் தமது பாரம்பரிய பிரதேசங்களில் தம்மைத் தாமே ஆள, தமது தலை விதியைத் தாமே நிர்ணயிக்கத் தமது விவகாரங்களுக்குத் தம் விருப்பத்திற்கமையத் தாமே தீர்வு காண உரிமை அதிகாரம் உண்டு.

5. தமிழ் பாரம்பரிய பிரேதேசத்தின் மண்ணையும் தமிழ் மக்களையும் பாதுகாக்க தமிழருக்கு எவ்வாறான உரிமை உள்ளதோ அவ்வாறு முஸ்லிம்களின் பாரம்பரிய பிரதேசத்தின் மண்ணையும் முஸ்லிம்களையும் பாதுகாக்கும் உரிமை முஸ்லிம்களுக்கு உண்டு

மேற் கூறப்பட்ட அடிப்படை நிலைப்பாட்டினை சொல்லிலும் செயலிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதுபோல் ஒப்புக்கொள்வதில் தான் வட கிழக்கு முஸ்லிம்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் இக்கட்டான நிலையிலிருந்து விடுதலை பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

### செயலில் ஒப்புக்கொள்வதற்கு செய்ய வேண்டியவை

1. ஒன்றிணைந்த வட கிழக்கு மாநிலத்தில் முஸ்லிம் பாரம்பரிய பிரதேசங்களில் இன ரீதியிலான உப நிருவாக, அரசியல் பிரிவுகள் உடனே ஏற்படுத்தப்பட வேண்டும். இப்பிரிவுகள் ஏற்படுத்தும் போது அந்தந்த இன உப பிரிவுகளின் குடிசன எண்ணிக்கைக்கேற்ப நிலபுலன்களும், இயற்கை வளங்களும் அப்பிரிவுகளோடு ஒன்றிணைக்கப்படவேண்டும்

2. பகிர்ந்தளிப்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சகல ஆட்சி அதிகாரங்களும் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் தனித் தனி வழங்கப்பட வேண்டும்.

3. மாறுபட்ட இனத்தவரைக் கொண்ட திட்டமிட்ட குடியேற்றம் நடைபெறுவது முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும்.

4. ஒன்றிணைந்த வட கிழக்கு மாநிலத்தில் சட்டமும் ஒழுங்கும் தமிழ்ப் பிரதேசத்தில் தமிழர் கைகளிலும், முஸ்லிம் பிரதேசத்தில் முஸ்லிங்கள் கைகளிலும் ஒப்படைக்கப்படவேண்டும்.



எம். ஐ. எம். முஹையத்தீன்
செயலாளர் நாயகம்,
முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி.

### இவற்றை உத்தரவாதப்படுத்துவதற்கும் நிஜமாகவே நடைமுறைப்படுத்துவதற்கும் செய்ய வேண்டியவை.

1. தமிழர் முஸ்லிங்களின் மத கலாசாரங்களின் சமத்துவம் நிஜமாகவே மதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

2. தமிழ், முஸ்லிம் இனங்கள் வட கிழக்கு மாநிலத்தில் சம மதிப்புள்ள சம அதிகாரம் கொண்ட சம பங்காளியான இனங்கள் என்பது ஏற்கப்பட்டு செயல் படுத்தப்பட வேண்டும்.

3. அரசியல் ராஜ்ய அதிகாரம் ஒரு இனத்தின் கரங்களில் மட்டும் குவிக்கப்படாமல் அனைத்து இனங்களுக்குமிடையில் பகிரப்படுவது என்ற ஜனநாயகக் கோட்பாடு அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

4. இனங்களின் சுய நிர்ணய உரிமை என்னும் கோட்பாடு முழு மனதுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

5. ஜனநாயகமும் ஜனநாயகக் கோட்பாடுகளும் எல்லா இனங்களுக்கும், எல்லா மக்களுக்கும் உண்மையாகவே உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களும் இனப்பிரச்சினையின் நிரந்தரமான தீர்வுக்குத் தமது பங்களிப்பைச் செய்யக்கடமைப்பட்டுள்ளார்கள். (7-ம் பக்கம் பார்க்க)



சேர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ள டொமினிக்கன் தூதுவரும், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணிப் பிரமுகருமான அல்—ஹாஜ் அப்துல் டப்ளியு. எம். அமீர் அவர்களுக்கு கௌரவ வர்த்தக கப்பல்துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் தலைமையில் மார்ச் 20 செவ்வாய் இரவு ஹோட்டல் லங்கா ஒபரோயில் விருந்துபசாரமொன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. சேர் அப்துல் அமீர் அவர்களின் நெருங்கிய நண்பர்களும், சகாக்களும் இணைந்து நடத்திய இவ்விராப்போசன வைபவத்திற்கு தேசமானி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத். கௌரவ உயர்கல்வி, விஞ்ஞான, தொழில் நுட்ப அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமித், பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுதூதுவர்கள், முஸ்லிம் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் அல்ஹாஜ் எம். ஐ. எம். முஹையத்தீன் அவர்களும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணிக்காக கொழும்பு - 13 98 விவேகானந்த மேட்டிலுள்ள சங்கர் சன்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது